UNIVERSITY OF JAFFNA
LIBRARY
18 SEP 2000
PERIODICALS DIVISION

REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Established 19 Feb. 1876

# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர் : 124
இதழ் : 09
03 புரட்டாதி
2000
விலை : ரூ.5

# போரினால் அல்லற்படும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி மனித மாண்பை பேணுவதே எமது நிலையத்தின் நோக்கம்

## வெள்ளிவிழாவில் மனித முன்னேற்ற நிலைய இயக்குனர் C.G. ஜெயக்குமார் அடிகள்

யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தின் (**Human Development Centre - HUDEC**) அனுசரணையுடன் **Catholic Fund for Overseas Development (CAFOD, London)** நிதி நிறுவனத்தின் உதவியுடன் இளவாலை, மாதகல், பெரியவிளான் ஆகிய பகுதிகளில் இயங்கும் விவசாய சங்கங்களின் சமூக வளமாக்கல் திட்டங்களை 12.08.2000 அன்று மனித முன்னேற்ற நிலைய இயக்குனர் **C.G.** ஜெயக்குமார் அடிகள் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் என எமது இளவாலை நிருபர் **S.M.** வுளோறன்ஸ் தெரிவித்தார்.

எமது மண்ணினதும் மக்களினதும் இன்றைய நெருக்கடியான சூழ் நிலையில் ஏற்பட்டுள்ள போரின் விளைவுகளால் மக்களின் வாழ்க்கைத் தரம் வெகுவாகக் குறைந்துள்ளது. வாழ்க்கையில் அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டவும் நேர்மையான உழைப்பின் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் எந்நேரமும் உதவிக்கரம் கொடுப்பதன் வழியாக மனித மாண்பை பேண நாம் முயற்சிக்கிறோம். போரினால் அல்லற்படும் மக் களுக்கு உதவிக்கரம் நீட்டி மனித உரிமையையும் மாண்பையும் பேணு வதே எமது நிலையத்தின் நோக்கமாகும். நாம் பிறரில் தங்கி வாழ்பவர் களாக நிற்காது எமது சொந்தக் காலில் நின்று பிறருக்கு வாழ்வளிப்ப வராகவும் எமது வளங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து ஒன்றுபட்டு முன்னேறுபவர்களாகவும் விளங்கவேண்டும். என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**I would like to thank CAFOD which is the offical organization of the Bishop's conference of England and Wales for their care and concern for the people in the North of Sri Lanka who are in the mids of ethnic war. Their timely help uplifted the standarad of life of our people.**

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)

## "நீங்கள் சாகாமல் தப்பியது எப்படி?" எனது குறி ஒருபோதும் தப்பாது

பத்திமா இரகசியம் அண்மையில் வெளியிடப்பட்ட போது திருத்தந்தை 1981ஆம் ஆண்டு அலி அகாவினால் சுடப்பட்ட சம்பவமும் புதுமையாக அவர் பாதுகாக்கப்பட்டதும் முன்கூட்டியே கூறப்பட்டிருந்தது தெளிவாகியுள்ளது. "திருத் தந்தையைப் பாதுகாத்த பத்திமா அன்னை" என்ற தலைப்பில் உள்ளே விசேட சிறப்புக் கட்டுரை உள்ளது. திருத்தந்தை சுடப்படுவதற்கு சில விநாடிகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படமும் பிரசுரமாகியுள்ளது.

## பாதுகாவலன் 125ஆவது ஆண்டுமலர் போட்டி

**பாதுகாவலன் 125ஆவது ஆண்டு மலர் அட்டைப்படப் போட்டியில் நீங்களும் பங்குபற்றலாம். தெரிவுசெய்யப்படும் படத்திற்கு ரூபா 2000 வழங்கப்படும். விபரங்கள் உள்ளே காணலாம்.**

## யாழ். போதனா வைத்தியசாலையில் ஆன்மீக சமூக உளநலப் பணியகம்

யாழ். வைத்தியசாலை சிற்றாலய ஆன்மீக குருவின் பணிகளை கடந்த 21 ஆண்டுகளாக (1979 - 2000) அமலமரித் தியாகிகளின் முதல்வரின் வழிகாட்டுதலிலும் கண்காணிப்பிலும் அமைதியான அன்பான முறையில் ஆற்றிவரும் அமலமரித் தியாகிகள் சபையினர் பாராட்டப்பட வேண்டியவர்கள். டானியல் அ.ம.தி. அடிகள் இப் பணியினை பொறுப்பேற்றது முதல் இன்று பணியாற்றும் அன்புராசா அ.ம.தி அடிகள் வரை, இப்பணி பல்வேறு பரிணாமங்களைப் பெற்று காலத்தின் தேவைகளுக்கேற்ப வளமும், வளர்ச்சியும் பெற்றுவந்துள்ளது. அண்மையில் வைத்தியசாலை சிற்றா லயம் விஸ்தரிக்கப்பட்டு "ஆன்மீக சமூக உளநல பணியகம்" என்ற பெயருடன் தன் பணிகளையும் விரிவாக்கி உள்ளது. இப்பணி பற்றி அன்புராசா அ.ம.தி. அடிகளுடன் எமது பாதுகாவலன் நிருபர் மேற்கொண்ட செவ்வியினை **விசேட இணைப்பில் காணலாம்**

## "கிளிநொச்சியை பார்க்க வேதனையாக உள்ளது"

### கிளி. - முல்லை. மறைக்கோட்டம் பற்றி - யாழ். ஆயர்

- ★ அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள் விலை அதிகம்!
- ★ உயர்தர பரீட்சையின் போதும் ஷெல், குண்டு வீச்சுக்கள்!
- ★ கிளிநொச்சி பகுதியில் 12 ஆலயங்கள் முற்றாக சேதம்!
- ★ தென்மராட்சி 1200 குடும்பங்களுக்கு நிவாரணமில்லை!
- ★ உருத்திரபுரம் - D8, D10 பகுதிகள் இயங்குகின்றன!
- ★ ஆவணி மடுத் திருவிழாவிற்கு வன்னியிலிருந்து அநேகர்!

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் வன்னி விஜயம் பற்றி பாதுகாவலன் பத்திரிகை சார்பாக தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோம். ஏற்கனவே வீரகேசரியின் 20.08.2000, 27.08.2000 பத்திரிகைகளில் தமது பேட்டி வந்திருப்பதாக தெரிவித்த அவர் கூறிய மேலதிக விபரங்களை 2ஆம் பக்கத்தில் காணலாம்.

## வேதாகமத்தின் புதிய மொழிபெயர்ப்பை பயன்படுத்த வழிபாட்டுக் கூட்டத்தில் அழைப்பு

வேதாகம புதிய மொழிபெயர்ப்பை இறை மக்களிடையே ஊக்குவிக்கும் முகமாக திருப்பலி வாசகங்களுக்கும் வழிபாட்டுக்கும் பயன்படுத்தவும் என்று திருவழிபாட்டு ஆணைக்குழுவின் புதிய இயக்குனர் ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார். இவற்றோடு கூட திருவழிபாட்டை பயனுள்ள விதமாகவும் அனைவரும் பங்குகொள்ளும் விதமாகவும் அமைக்க எடுக்கப்பட்ட வேறு பல தீர்மானங்களையும் தமது ஆணைக்குழு அறிக்கையின் மூலம் பங்குகளில் நடைமுறைப்படுத்தும்படி பங்குத்தந்தையர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேராபத்திலிருந்து நாட்டைக் காக்கவும்!

## - மதச்சார்பு அமைப்புகளின் வேண்டுகோள் -

யாழ். குடாநாட்டில் போர் தீவிரமடைந்து வருவது குறித்தும் அதனால் ஏற்படக்கூடிய பாரிய அழிவுகள் குறித்தும் பல மதச்சார்பு அமைப்புகள் கவலை அடைந்து, இதைத் தவிர்ப்பதற்கு உடனடியான யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட்டு, பேச்சுவார்த்தைக்கு வழிசெய்ய வேண்டுமென தமது அறிக்கைகளில் சுட்டிக்காட்டியுள்ளன. நீதி சமாதான மனித முன்னேற்றத்துக்கான ஆணைக்குழு, நீதி சமாதான சமரசத்துக்கான தேசிய இயக்கம், சர்வமத காங்கிரஸ் ஆகிய மத சார்பு அமைப்புகளின் அறிக்கையின் சுருக்கத்தை கீழே காணலாம்.

### நீதி, சமாதானம் மனித முன்னேற்றத்திற்கான கத்தோலிக்க ஆணைக்குழு

"இப் போரினால் பல நூற்றுக்கணக்கான உயிர்கள் இரு தரப்பிலும் பலியாகியுள்ளதுடன், அப்பாவிப் பொதுமக்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர வேண்டியுள்ளது. குடாநாட்டு மக்கள் படும் துன்பத்தை பிறர் முழுமையாக உணர முடியாது. துரதிஷ்டவசமாக இதில் தீர்மானம் எடுக்கவேண்டியவர்கள்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த நிலத்தில் தேர்தல் களம்

நோர்வே நாட்டின் சமரச முயற்சி கண்டு நிம்மதிப் பெருமூச்சுவிட்ட மக்கள், வழமை போல மீண்டும் ஒரு தடவை ஏமாற்றப்பட்டுள்ளார்கள்.

யுத்த மேகங்கள் சூழ்ந்த நிலையில் இடி முழக்கங்கள் அடிக்கடி கேட்க, எப்போது போர் வெடிக்குமோ! என்ற ஏக்க உணர்வு அதிகரித்துள்ளது.

சீவியகால சொத்து முழுவதையும் ஒருசில நொடிப் பொழுதுகளில் எடுத்துசெல்ல முடியாது என்ற அனுபவ அறிவுடனும்இன்னுமொரு தடவை மீண்டும் அனைத்தை யும் இழக்கமுடியாது என்ற தெளிவான முடிவுடனும் இன்னும் எத்தனை நாளுக்கு இப்படியே கொண்டோடித் திரிவது என்ற மனவேதனையுடன் அவலப் பயணத்தை தொடர்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க நாட்டின் 11வது பொதுத் தேர்தல் களம் யுத்த நிலத்தில் அமைக்கப்படுகிறது.

யாழ். குடாநாடு அரச கைகளுக்கு மாறிய பின்னர் மக்களின் மனநிலையையும், போர்க்களத்தில் தேர்தல் களம் எப்படி அமையப் போகிறது? என்பதையும் சர்வதேச சமூகம் மிக உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

தேர்தல் களம் பல கண்டு, ஆசை வார்த்தைகள் பல கேட்டு, ஏமாந்துபோய் மறுமுறை வரட்டும் என்று துணிவாக இருந்துவிட்டு மற்ற முறை வந்த போதும் ஆசை வார்த்தையில் மயங்கியதால் தான் இன்னும் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம்.

இம்முறை ஒன்று செய்வோமா? அறிந்தவன், அயலவன், உறவினன், என்ற உறவுமுறைகளையும் வேலை, பதவி, பணம் கிடைக்கும் என்ற சலுகைகளை தேர்தல் காலத்தில் உடைத்தெறிவோம். தமிழர்கள் ஒருபோதும் ஒன்றுசேர மாட்டார்கள் என்ற சுலோகத்தை இந்தத் தேர்தல் காலத்தில் தகர்த்தெறிவோம்.

சலுகைகள் எம் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும், போருக்கும் தீர்வுகாணப் போவதில்லை. இனப்பிரச்சினைக்கு நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு தேவை என நாம் வேண்டுவது ஒரு சலுகையல்ல, அது எமது அடிப்படை உரிமை.

தமிழ் வேட்பாளர்களே! கட்சிகளே! நீங்கள் ஒன்று சேர வேண்டிய நேரம் இது. தனிப்பட்ட சிறு சிறு குரோதங்களை மறந்து பொதுநலனுக்காக ஒன்று சேருங்கள். தமிழ் மக்கள் குழப்பமின்றி வாக்களிக்க வழிசெய்யுங்கள்.

தமிழ் மக்களே! சலுகைகளையல்ல இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய கட்சியினை சரியாக தெரிவுசெய்யுங்கள். பல கட்சிகளைத் தேர்ந்து அழுத்தம் கொடுக்க முடியாத நிலையினை விடுத்து ஒரு கட்சியினை உறுதியாக தெரிவு செய்யுங்கள். இதுவே உங்கள் பணி.

# "கிளிநொச்சியைப் பார்க்க வேதனையாக உள்ளது"

## கிளி. - முல்லை. மறைக்கோட்ட விஜயம் பற்றிய யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையுடன்

### பாதுகாவலன் விசேட நிருபரின் செவ்வி

**வன்னியில் அத்தியாவசியப் பொருட்களுக்கு பெரும் தட்டுப் பாடு நிலவுகின்றது. மண்எண்ணெய் விலை இன்னும் மிக அதிகமாகவே இருக்கிறது. ஒரு லீற்றர் மண்எண்ணெய் 250 ரூபாவாக விற்கப்படுகின்றது. க.பொ.த (உ/த) பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் ஷெல் வீச்சுக்களும் விமான குண்டுத் தாக்குதல்களும் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டேயிருக்கின்றது. மருந்து வகைகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடே நிலவி வருகின்றது. மல்லாவி, கிளிநொச்சி வைத்தியசாலைகளில் சாதாரண நோய்களுக்குரிய மருந்துகள் கூட கையிருப்பிலில்லை.**

எனது இம்முறை விஜயத்தின் போது கிளி. - முல்லை. மறைக்கோட்டத்தின் ஏறக்குறைய எல்லாப் பங்குகளுக்கும் சென்றேன். குருக்களுக்கான கூட்டமொன்றும் நடைபெற்றது.

யூபிலி ஆண்டை ஒட்டிய யாத்திரைகளும் நற்கருணை விழாக் களும் கிளி. - முல்லை. மறைக்கோட்டத்தில் பரவலாக நடைபெற்றிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். மக்கள் அதிகமாக உள்ள அளம்பில், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, அமதிபுரம் பகுதிகளிலும் யூபிலி ஆண்டு யாத்திரைகளும், நற்கருணை விழாக்களும் நடைபெற்றுள்ளன.

முல்லைத்தீவு பங்கு பிரிக்கப்பட்டு அளம்பில், தனிப்பங்காக்கப்பட்டு யூட் அமலதாஸ் அடிகளின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. ஜேம்ஸ் பத்திநாதன் அடிகள் D8 உருத்திரபுரத்தில் குடியமர்ந்துள்ளார். உருத்திரபுரத்தின் கட்டடத்தின் ஒரு பகுதிக்கு தாம் ஏற்கனவே கழற்றி வைத்திருந்த சீற்றுக்களைப் போட்டு 60 மாணவர்களையும் அதில் தங்குவதற்குவசதி செய்துள்ளார். அவர் பத்திமா மாதா ஆலயத்தில் அங்குள்ள மக்களின் ஆன்மீக தேவைகளை நிறைவேற்றி திருப்பலி ஒப்புக் கொடுத்து வருகின்றார்.

மதுரநாயகம் அடிகள் D10 இல் மீளவும் குடியமர்ந்துள்ளார். அங்குள்ள அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி அவர்களின் ஆன்மீகத் தேவைகளை கவனித்து வருகின்றார்.

இந்த முறை கிளி.- முல்லை. மறைக் கோட்டத்திலிருந்து அனேகமான மக்கள் மடுத் திருப்பலி விழாவில் கலந்து கொண்டதாக அறிகிறேன். ஏறக்குறைய 8 குருக்களும், முல்லைத்தீவு போன்ற பகுதிகளிலிருந்து அநேக மக்களும் மடுவிற்குச் சென்றிருக்கிறார்கள்.

இம்மாதம் 20ஆம் திகதி S.A.ஜோர்ஜ் அடிகளார் வலைப்பாட்டுப் பங்கிலிருந்து மாற்றலாகி யாழ். நகருக்கு வர புறப்படுகின்ற வேளையில் அண்மையில் யாழ். நகரிலிருந்து சென்ற A.றொக் அடிகளார் வலைப்பாட்டை பொறுப்பேற்கவுள்ளார்.

கிளிநொச்சிப் பகுதியை பார்க்க மிகவும் மனவேதனையாக இருந்தது. ஆலயத்தில் கூரையில்லாமலும் அறை வீடு கூரை மரங்கள் இல்லாமலும் சேதமுற்றிருந்தது. பரந்தன் கோவில் ஷெல்லினால் தாக்கப்பட்டுள்ளது. அறை வீடு முழுதாக அழிந்துள்ளது. ஆலயத்தின் முன் பகுதியிலிருந்த சுரூபம் ஷெல்லினால் முற்றாக தாக்கப்பட்டுள்ளது. முரசுமோட்டை கோவில் முற்றாக சேதமடைந்துள்ளது.

**யாழ். நகரின் தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களையும், அருள்திரு பிரான்சிஸ், ஆனந்தக்குமார் ஆகிய குருக்களையும் சந்தித்தேன். இவர்களுக்கு பொன்நகரில் மனித முன்னேற்றத்தின் உதவியால் குடிசைகள் அமைக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தென்மராட்சியிலிருந்து வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்த 1200 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.**

கொழும்புக்கு வந்து, இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். நாட்டு நிலைமைகள் ஒட்டிய அறிக்கையொன்றினை ஆயர் பேரவையின் சார்பாக வெளியிட்டோம். அதன் பின்னர் **தேவத்தையில் நடைபெற்ற நோயாளர் தின ஆராதனையில் கலந்துகொண்டு தமிழில் மறையுரையாற்றினேன். லீவுகாலம் என்றபடியால் ஏறக்குறைய 2 அரை இலட்சம் மக்கள் அங்கு குழுமியிருந்தனர்.**

# கத்தோலிக்க ஆயர்களின் சமாதானத்திற்கான அழைப்பு!

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அறிக்கை

## உடனடி யுத்த நிறுத்தத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## சகல கட்சிகளும் ஒரு நீதியான தேர்தலுக்கு தம்மை அர்ப்பணிக்க வேண்டும்

**இலங்கை 11வது பொதுத் தேர்தலை எதிர்நோக்கியுள்ள வேளையில் இலங்கைக் கத் தோலிக்க ஆயர் பேரவை அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. இனப்பிரச்சினை பற்றியும், எதிர்வரும் தேர்தல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ள, அவ் அறிக்கையின் முக்கிய கருத்துக்களை கீழே தருகிறோம்.**

**1. போரினாலும், வன்முறையாலும் நிலையான தீர்வினை அடையமுடியாது. போரிடும் தரப்பினருக்கிடையில் உடனடி யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த உடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அத்துடன் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வினை அடிப்படையாகக் கொண்ட பயனளிக்கும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.**

2. இலங்கையின் அடிப்படை இறைமையையும், ஒருமைப்பாட்டையும் மதிக்கின்ற வேளையில் இலங்கை உண்மையிலேயே ஒரு பல்லின - மொழி, மத நாடு என்பதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

3. இலங்கையின் சரித்திரத்தோடும், கலாச்சாரத்தோடும் ஆழ்ந்த தொடர்புடைய வகையில் பௌத்த மதத்திற்கு முக்கிய இடம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்கின்ற வேளையில், மற்றைய சமயக் குழுக்களின் உரிமைகளும், சலுகைகளும் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

4. இனத்தையோ, மொழியையோ, சமய நம்பிக்கை யையோ பொருட்படுத்தாது எல்லா குடிமக்களினதும் சமத்துவமும், அடிப்படை உரிமையையும் பாதுகாக்கப்படவும் உறுதி செய்யப்படவும் வேண்டும்.

5. இலங்கையின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பராமரிக்கின்ற வகையில் போதியளவு அரசியல் அதிகாரங்கள் எல்லாப் பிரதேசங்களுக்கும் பகிரப்பட வேண்டும். இது பல்வேறு பிரதேசங்களில் வசிக்கின்றவர்கள், தமது நீதியான அபிலாஷைகளை நிறைவு செய்யவும், இலங்கை ஒருநாடு என்கின்ற வகையில், தம்மை ஆளவும் முன்னேறவும் உதவும்.

6. எதிர்வருகின்ற பொதுத்தேர்தல் களத்தில் எல்லா குடிமக்களதும் அடிப்படை சமத்துவத்தை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். இது எல்லா நிலைகளுக்கும் குறிப்பாக பொதுப் பணிக்கு ஆட்களை சேர்த்தல், நிர்வாக பணி, கல்வி, சுகாதாரம், போன்றவற்றிற்கும் உண்மையாக தாகவே பொருத்தமானதாகும்.

7. சுதந்திர பொது சேவைகள் ஆணைக்குழு, பொலீஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு ஆகிய அமைப்புக்கள் நீதியையும், ஒழுங்கினையும் நிலைநாட்ட மிகவும் முக்கியமானவை.

**8. பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்ற சகல கட்சிகளும் பொதுத்தேர்தலில் வன்முறை, ஆள்மாறாட்டம், குற்றச் செயல் என்பன இல்லாத ஒரு நீதியான தேர்தலுக்கு தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அப்போது தான் உண்மையான ஜனநாயகம் பேணிப் பாதுகாக்கப்படும்.**

9. தேர்தல் செயற்பாடுகளில் எந்தக் குளறுபடியும் ஏற்படாமல் இருக்க அரசு விசேடமாக உறுதிசெய்து மக்கள் தமது கருத்துக்களை வாக்கின் மூலமாக சுதந்திரமாக வெளிப்படுத்த சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும்.

10. எந்த வன்முறையும், ஆள்மாறாட்டமும், சட்டமில்லா நிலையும், தேர்தல் சுத்துமாத்துக்களும் இந்த நாட்டின் மக்களுக்கும் அவர்களது தேர்தல் செயற்பாட்டுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் எதிரான குற்றமாகும்.

11. ஊடகம், குறிப்பாக அரச ஊடகம் எல்லா அரசியல் கட்சிகளும், கருத்துத் தெரிவிப்பவர்களும் இலகுவாக அணுகக் கூடியதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு, எல்லா விதமான கருத்துக்களையும் அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும்.

12. எல்லா தேர்தல் சட்டங்களும், எல்லாக் கட்சிகளாலும் நுணுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுவதன் வழியாக தேவையற்ற மோதல்களும், வன்முறைகளும் தவிர்க்கப்படவேண்டும். எல்லா ஊடகத்தினரும் பகைமையையும், இனவாதத்தையும் தூண்டாமல், பொறுப்புணர்வோடு செயற்படுவது அவசியமாகும். *

# 100ற்கு மேற்பட்ட ஆலயங்கள் சேதம்

**வடபகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட ஆலயங்கள் குண்டுத் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளன என 27.08.2000 அன்று வீரகேசரிக்கு வழங்கிய பேட்டியில் யாழ். ஆயர் தெரிவித்துள்ளார். அப்பேட்டியின் முக்கிய விடயங்களைக் கீழே தருகின்றோம்.**

யுத்த அனர்த்தங்களால் 10 ஆண்டுகளுக்கு மேலாக நூற்றுக்கு மேற்பட்ட ஆலயங்கள் மக்களின்றி செயலிழந்து போயுள்ளன. கத்தோலிக்க மக்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் கரையோரப் பகுதியிலேயே வாழ்கிறார்கள். இராணுவத்தினரும் கரையோரப் பகுதிகளை அண்டியே தாக்குதல்களை நடத்துவதனால் அப் பகுதியிலுள்ள கத்தோலிக்க ஆலயங்களும், மடங்களும் சேதமடைந்துள்ளன.

முல்லைத்தீவு, கொக்கிளாய் தொடங்கி மேற்கு கரையில் அமைந்துள்ள முள்ளிக்குளம் வரை அனைத்து ஆலயங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத் தீவுப் பகுதிக்ளில் 12 ஆலயங்கள் முற்றாக சேதமடைந்துள்ளன.

தொண்டமனாறு முதல் மாதகல் வரையுள்ள ஆலயங்கள் குடியிருப்பாளர்கள் இன்றி பாழடைந்து போயுள்ளது.

குருநகர் யாகப்பர் ஆலயம், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், என்பன பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன. தீவுப்பகுதியில் குறிப்பாக ஊர்காவற்றுறை மேற்கு யாகப்பர் ஆலயம், ஊர்காவற்றுறை கிழக்கு அந்தோனியார் ஆலயம், ஊர்காவற்றுறை மையப்பகுதி சூசையப்பர் ஆலயம் மற்றும் சின்னமடு, மண்டைதீவு ஆலயங்களும் சேதமாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதா பியோவின் மன்றாட்டினால் நேர்ந்த புதுமை?

பிதா பியோ வாழ்ந்த இடமாகிய சான் ஜோவானி ரொட்டுண்டோவில் கடும் நோயுற்றிருந்த ஒரு சிறுவன் குணமடைந்த நிகழ்ச்சி பற்றி திருச்சபை அதிகாரிகள் ஆராய்ந்து வருகிறார்கள். இது ஒரு புதுமை என நிரூபிக்கப்பட்டால் முத்திப்பேறுபெற்ற பிதா பியோ புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவதற்கு அது உதவலாம்.

பாடசாலையில் திடீரென நோயுற்ற இச்சிறுவன் பிதா பியோ கட்டிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அவனுக்கு கடுமையான மெனிஞ்சைற்றிஸ் நோய் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது. இத்தகைய நோய் கண்டவருள் ஆயிரத்துக்கு ஐந்து பேரே குணமடைந்திருக்கின்றனர் என வைத்தியர்கள் தெரிவித்தனர். சிறுவனின் பெற்றோர் தினந்தோறும் பிதா பியோவின் கல்லறையைத் தரிசித்து அவனுக்காக மன்றாடினர். இதையறிந்த பிறரும் அவர்களோடு சேர்ந்து மன்றாடினர்.

சிறுவன் பூரணமாகக் குணமடைந்தான். அதற்காக நன்றி செலுத்தும் பொருட்டு வாரந்தோறும் தன் பெற்றோருடன் இத்தலத்தை தரிசித்து திருப்பலியில் பங்குபற்றுகிறான்.

# 466 வருட சச்சரவை நீக்க ஆய்வு

30 க்கு மேற்பட்ட ரோமன் கத்தோலிக்க அங்கிலிக்கன் திருச்சபைகளின் ஆயர்கள் கடந்த மே மாதம் கனடாவிலுள்ள ரொறன்டோவில் ஒன்றுகூடி 466 வருடங்களுக்கு முன் இங்கிலாந்து அரசினால் உண்டாக்கப்பட்ட சச்சரவை எவ்விதம் நீக்கலாம் என ஆராய்ந்தனர்.

அங்கிளிக்கன் திருச்சபைக் குழுவுக்கு கன்டர்பரி பேராயர் டாக்டர் ஹக் ஹறேயும், கத்தோலிக்க திருச்சபைக் குழுவுக்கு கிறிஸ்தவ ஒன்றிப்பு சபையின் தலைவர் கருதினால் எட்வேட் காசிட்டியும் தலைமை தாங்கினர்.

# 9ம் பத்திநாதருக்கு முத்திப்பேறு பட்டம்

9ம் பத்திநாத பாப்பரசருக்கும், 2ம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டியவரான திருத்தந்தை 23ம் அருளப்பருக்கும் செப்டெம்பர் மாதத்தில் முத்திப் பேறுபெற்ற பட்டம் அளிக்கப்படவிருக்கின்றது. புனித லோரன்ஸ் பேராலயத்தில் அடக்கும் செய்யப்பட்டிருந்த 9ம் பத்திநாதரது உடல் அழியாத நிலையில் உள்ளது. முதலாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டுவித்தவரும், தேவதாயின் அமல உற்பவத்தைப் பிரகடனம் செய்தவரும் இவரே. ஆயினும் சில அரசியல் பிழைகள் இவருக்கெதிராகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன இது தொடர்பாக இவர்பற்றிய ஆய்வுக் குழுவின் தலைவரான பேராயர் புரூனோ ஹெறாட்னி ''புனித விடயத்தில் அரசியலைத் தொடர்பு படுத்துவது முற்றிலும் தவறானது. திருத்தந்தை 9ம் பத்தி நாதரை ஆசாரத்துக்குரியவராக்குவது காலம் கடத்தப்பட்ட ஒரு நீதியின் செயலாகும் என்று கூறினார்.

# இத்தாலியில் சாட்சி கொலை

குசிகாண்டம் என்னுமிடத்தில் பிதா ஜோர்ஜ் என்னும் குருவானவரின் கொலைக்கு கண்கண்ட சாட்சியாக இருந்த ஒருவரை கொலை செய்ததாக கிறிஸ்தவ மனித உரிமைகள் மன்றமும், அக்ரா மறைமாவட்ட பேராயர் வின்சென்ற் கொண்செசோவும் இந்தியப்பொலிசாரை குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நபர் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதால் அவரது மரணம் நேர்ந்ததாக பேராயர் கூறியுள்ளார். இவர் ஒரு இளம் குடும்பஸ்தர். இவரது மனைவி தனது முதல் மகவை கருத்தரித்துள்ளார். கைது செய்யப்பட்டிருந்தபோது தாம் பொலிசாரால் கொல்லப்படலாம் என இவர் அச்சம் தெரிவித்திருந்தார்.

# உலக இளைஞர் தினம்

உலக இளைஞர் தினம் இவ்வருடம் ஆகஸ்ட் 14ம் திகதியிலிருந்து 20ம் திகதிவரை உரோமாபுரியில் நிகழவிருக்கின்றது. இதற்கு 15 இலட்சம் இளைஞர்கள் சமூகமளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

திருத்தந்தையின் விசேட திருப்பலிகள் மறை அறிவு சேவைகள், சர்வதேச நட்புறவு தொடர்புகள் போன்ற பல அம்சங்கள் இதில் இடம் பெறும்.



# கிறிஸ்தவ உலகில் நடப்பவை சில

தொகுப்பு: ஆ. அஜந்தகுமார்

## திருச்சபையில் ஆயர்கள் தொகை அதிகரிப்பு

1978 முதல் 1998 வரையான 20 ஆண்டுகளில் திருச்சபையில் ஆயர்கள் தொகை 20% வீதத்தால் அதிகரித்துள்ளதாக வத்திக்கானில் வெளியிடப்பட்ட விபரத்திரட்டிலிருந்து தெரிய வருகிறது. உலக ஆயர்கள் தொகை 3700 இலிருந்து 4400 ஆக உயர்ந்துள்ளது. அமெரிக்காவில் 38 வீதமும், ஐரோப்பாவில் 33 வீதமும், ஆசியாவில் 14 வீதமும், ஆபிரிக்காவில் 12 வீதமும், அவுஸ்திரேலியாவில் 3 வீதமும் அதிகரிப்பு இடம் பெற்றுள்ளது.

இதே காலத்தில் குருக்கள் தொகை 416,300 இலிருந்து 406,000 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும் மறைமாவட்டக் குருக்கள் தொகை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதே வேளையில் நிரந்தர திருத்தொண்டர்கள் உபதேசிகள், பொது நிலைச் சேவையாளர் தொகை உயர்ந்துள்ளது.

# கத்தோலிக்க சிறுவர் சமய வழிபாடு குறைவு

பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட கனடா கத்தோலிக்கச் சிறுவர்களில் மூன்றிலொரு பகுதியினரே சமய வழிபாடுகளில் கலந்து கொள்ளுகிறார்கள். இவ்வாறு பிறாங் யோண்ஸ் எழுதிய சிறுவர்கள் மதவழிபாட்டுக்குச் செல்கின்றார்களா? என்ற ஆய்வுக் கட்டுரையில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாய்வு 1994 – 95 ம் ஆண்டுக்குரிய தரவுகளை அடிப்படையாகக்கொண்டது. இது சமயத்தினருடன் ஒப்பிடுகையில் அடி நிலைக்கு வருகின்றது. இக்கட்டுரையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 22 வீதமானவர்களே நாளாந்தம் ஆலயம் செல்கின்றனர். 18 வீதமானோர் மாதத்தில் ஒரு முறையும் 31 வீதமானோர் இடைக்கிடையும் திருப்பலியில் பங்குபற்றுகின்றனர்.

## 989 பேர் வணக்கத்துக்கு உரியவர்கள்

திருத்தந்தை 2ம் அருள்சின்னப்பரின் 21 வருட ஆட்சிக் காலத்தில் 989 பேர் ஆசாரத்துக்கும் வணக்கத்துக்கும் உரியவர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர். ஏப்பிரல் 10ம் திகதி நாற்பதாயிரம் யாத்திரீகர் கலந்து கொண்ட ஒரு வைபவத்தில் இரு குருக்களும் மூன்று கன்னியரும் ஆசாரத்துக்குரியவர்களாக உயர்த்தப்பட்டனர்.

# கனடா திருமறைக் கலாமன்றம் வழங்கிய 'குருதி மழை"

தவக்காலத்தில் திருப்பாடுகளின் காட்சியை கனடா திருமறைக்கலாமன்றம் வழக்கம்போல் இவ்வாண்டும் மேடையேற்றியது ''குருதி மழை'' என்னும் பெயரில் பிரமாண்டமான மேடை அமைப்புடன் 2½ மணி நேரம் நீடித்த இந்த நிகழ்ச்சியில் அறுபதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றினர். இம்முறை தமிழுடன் இடையே ஆங்கிலமும் கலந்து தயாரித்தது இளம் சமூகத்தினருக்கு பயனுள்ளதாயிருந்தது.

இம்முறை நடிப்புக்கு அதிகமாக இடமளித்து பல காட்சிகளை உள்ளடக்க வேண்டுமென்று ஒரு புது விதமான முறையில் இயக்கியதுடன் நடிகர்கள் சுதந்திரமாக தமது கற்பனையில் உருவாகிய வசனங்களையும் பேசி நடித்தனர்.

இந்நிகழ்ச்சியினால் சேர்க்கப்பட்ட பணம் தமிழ் ஈழத்திலே ஊனமுற்றவர்களின் அவசிய தேவைகளுக்காக வழங்கப்பட்டது.

# புதுடில்லி பேராயர் காலமானார்

புதுடில்லி பேராயரும், இந்திய ஆயர் பேரவைத் தலைவருமான பேராயர் அலன் டிலாஸ்டிக் போலந்தில் ஒரு மோட்டார் விபத்தில் மரணமானார். 71 வயதான இவர் 1979 ல் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டு, கடந்த 10 ஆண்டுகளாக புதுடில்லிப் பேராயராக பணியாற்றி வந்துள்ளார். திருத்தந்தையின் இந்திய வருகைக்கான ஏற்பாடுகள் இவரால் சிறப்பாகக் கையாளப்பட்டன.

அண்மைக் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கெதிராக இந்து தீவிரவாதிகளால் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்ட போது ஆயர் டிலாஸ்டிக் உறுதியாக நின்று குரல் கொடுத்தவராவார். இவரது மரணம் இந்தியச் திருச்சபைக்கு பேரிழப்பாகும்.

# சரித்திர உண்மைகளில் திருச்சபை பிராயச்சித்தம்

— திருத்தந்தை

புதிய ஆயிரம் ஆண்டு போலியான சமுதாயத்தை அல்லது திருச்சபையினால் செயல்படுத்தப் பட்ட பலநன்மைகளை மறுதலிப்பதை வெளிப்படுத்துவதற்கு முன் கத்தோலிக்க திருச்சபை பிராயச்சித்த செயல்களை மேற்கொள்ள வேண்டும். தமது அங்கத்தவர்களையும் ஸ்தாபனங்களையும் தொடர்ச்சியான புனிதப்படுத்தல் மூலம் இறைவனின் இறுதிச் சாட்சியாக உலகிற்கு அளிக்கலாம். ஆகையினால் திருச்சபை தமது பிள்ளைகளின் பெலவீனங்களுக்காகவும் மன்னிப்பு கோர விரும்புகின்றது. எனத் திருத்தந்தை தனது செப்டெம்பர் முதலாம் திகதிய பொதுப் பார்வையாளருக்கான உரையில் கூறினார்.

திருத் தந்தை மேலும் கூறியதாவது:- இப்பிராயச் சித்தச் செயல் சாந்தமானதும் ஜீவகளையுள்ளதுமான சரித்திர உண்மைகளில் அமைந்திருக்க வேண்டும் இது திருச்சபை சரித்திரத்தில் காலம் காலமாக நிறைவேற்றப்பட்ட நற் செயல்களை நீதியற்ற சமுதாயத்தினாலும் அல்லது ஆராயப்படாமலும் விளக்கங்களினாலும் மறுதலிப்பதாய் இருத்தலாகாது. திருச்சபையின் நற் செயல்கள் பல துறைகளில் கருணையில் தொடங்கி சுகாதாரம் கலாச்சாரம் வரை விரிவடைந்திருக்கிறது.

திருச்சபை இரக்கத்தை நாடும் பாவங்களுள் கிறீஸ்தவர்களிடையே அவமானமாக விளங்கும் பிரிவினை. உண்மையை நிலைப்படுத்த நிர்ப்பந்தித்தல் மனித உரிமையை மதிக்க தவறுவதும் அதனைக் காக்க முனையாததும் சிலவாகும். இவைகளுக்கான விடையை அளிக்க முற்படுகையில் அதனை பூரணமாக அறிந்து ஆராய்ந்து அவை எவ்விதம் சரித்திர பூர்வமாக நிலை நாட்டப்பட்டதென்பதை அறிந்த பின்பே முன் வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அன்பின் வாசகர்களுக்கு வணக்கம்

அநேக வாசகர் கடிதங்கள் வந்துள்ளன, எழுதிய அனைவரையும் அன்புடன் நினைவு கூருகின்றோம்.

பாதுகாவலன் வளர்ச்சி, தளர்ச்சி பற்றிய பாராட்டுதல்களையும், குறைநிறைகளையும் எழுதுவதன் மூலம் எம்மை ஊக்கமாகவும், உறுதியாகவும் செயற்படவைக்கிறீர்கள். சில கடிதங்கள் பாராட்டுதல்களை மாத்திரம் தருகின்றன.

தமது கடிதங்கள் பிரசுரிக்கப்படாததையிட்டு எவரும் மனத்தாங்கல் கொள்ளவேண்டாம், பத்திரிகைபற்றி உங்கள் மனதில் எழும் எண்ணங்கள் சிந்தனைகள், கருத்தோட்டங்களை வரவேற்கிறோம். (ஆ-ர்)

அன்பிற்இனிய அடிகளாரே,

உங்களுடைய பெருங்கருணையினால் பாதுகாவலன் ஒழுங்காக வருகிறது. முகவரியில் (Address) தவறுதலாக இல. 37 எனப்போடப்பட்டிருந்தாலும் பத்திரிகை என் கைக்கு வருகிறது தயவுசெய்து 87 எனக்குறிப்பிடுமாறு சொல்லிவைக்கவும். காவலன் பத்திரிகை சிறிதாயிருந்தாலும் பல நிகழ்ச்சிகளையும் தொகுத்து மிகச் சிறப்பான முறையில் அதனை நடாத்தி வருகின்றீர்கள்

வட. கிழக்கு மாகாணக் கத். நிகழ்ச்சிகளைக் கூடியவரை பெற்று அவற்றைக் குறிப்பிடுவதால் நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்வோருக்கு அவை பெரிதும் பயன்படும்.

இங்கு வாழும் சிலருக்குப் பாதுகாவலனைக் காட்டினேன். அவர்கள் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன, ஆசையோடு எடுத்து வாசித்தார்கள்.

பாதுகாவலனில் புதிய எழுத்தாளர்களையும், புதிய ஆக்கங்களையும் பார்க்கிறேன், உங்களுடைய ஆசிரிய வசனங்களும் காலத்துக்கேற்ற மருந்துகளாகும்.

வரவரப் பத்திரிகை முன்னேற்றப்படிகளில் கால்வைத்துச் செல்வதை மட்டிடாமல் இருக்க முடியாது. உங்களுக்கு எனது பாராட்டுக்கள், பல துன்பங்களும், வசதி வாய்ப்புகள் இல்லாத காலமும் உங்களைப் பயமுறுத்தினாலும் வெற்றி நடையில் செல்லுவதைக் காண்கிறேன்.

பாதுகாவலன் கட்டுரைகள் கவிதைகள் என்பன வர வர உச்சத்தில் ஏறுகின்றன; சிலரின் கவிதைகள் பாராட்டத்தக்கன.

எவ்வாறிருந்தாலும் பாதுகாவலன் உங்களுடைய வல்லமையினால் நல்ல சிறப்புப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

அரசியல் வெறியும் அடங்கி சமுதாயம் மீளவும் கண் விழிக்கும் போதுதான் மனிதனின் உண்மையான எண்ணங்கள் உதயம் செய்யும்,

அதுவரையும் பத்திரிகைகளை நினைப்பதுபோல் நடத்தவும் முடியாது; அதற்கான செல்வாக்கைப் பெறுவதும் இலகுவாயிராது.

எனவே இக்கால கட்டத்தில் நீங்கள் பல துன்பங்களையே சுமக்க நேரிடும். என்றாலும் காரியசித்தியோடு தொடர்ந்து உங்கள் பணி நிறைவேற வேண்டுமென்பது என் விருப்பம்,

நீங்களே தகுதியான ஒருவர். உங்கள் காலத்தில் பாதுகாவலன் துளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனியவேண்டும்.

இறைவன் உங்களுக்கு எல்லா நன்மைகளும் தந்து காப்பாராக.

நன்றி

உங்கள் அன்பான

**அமுது**

இலண்டன்

---

ஐயா!

கடந்த சில வருடங்களுக்கு முன்பு வெளி வந்த பாதுகாவலனிற்கும் தற்போது வெளிவரும் பாதுகாவலனிற்கும் இடையே நல்ல முன்னேற்றம் உள்ளது. முக்கியமாக 98, 99 ஆண்டுகளில் வெளிவந்த பாதுகாவலன் பத்திரிகைகள் ஒவ்வொன்றுமே பாதுகாத்து வைத்திருக்க வேண்டியளவுக்கு நன்றாக உள்ளது. அதற்கு காரணமான ஆசிரியருக்கு எமது வாழ்த்துக்கள்.

ஆயினும் 2000ஆம் ஆண்டில் வெளிவந்த இப்பத்திரிகைகளில் சற்று சோர்வுநிலை காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. எனவே மீண்டும் புதுப்பொலிவுடன் இதை வெளிக்கொணர முயற்சிக்க வேண்டும்.

பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்க வேண்டும், நட்டமின்றி செயற்படவேண்டும், ஒரு நாள் பத்திரிகையை 6/- 10/- கொடுத்து வாங்கும் எமது மக்கள் 1 வார பத்திரிகையை 5/- கொடுத்து வாங்க மாட்டார்களா? ஊக்குவிப்புதான் போதாது. இன்று ஒவ்வொரு கத்தோலிக்கரின் வீட்டிற்கும் ஒரு பாதுகாவலன் போய்ச்சேர முயற்சி செய்வது உங்கள் கைகளில்தான் உள்ளது.

இப்படிக்கு

J. குமார்.

நல்லூர்

பிரதி:- யாழ் ஆயர்

தங்களது நீண்ட கடிதம் கிடைத்தது. முழுவதையும் பிரசுரிக்க முடியாதுள்ளது. தங்கள் குறிப்புகளுக்கு நன்றி.

(ஆ-ர்)

## முல்லைத்தீவில் இருந்து

பாதுகாவலன் ஆசிரியர் அவர்கட்கு!

என்னுடைய வேண்டுகோளிற்கிணங்க நீங்கள் 3ஆம் மாதத்தில் இருந்து கார்த்திகை மாதம் மட்டும் ஒரே தடவை முழுப்பத்திரிகை வந்து சேர்ந்ததையிட்டும் மிகவும் சந்தோசமடைந்தேன். உங்களுடைய சிரமத்தையும் பாராது எனக்கு முழுப்பத்திரிகையையும் அனுப்பிவைத்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு உங்கள் சேவை என்றும் நல்ல முறையாகச் செயற்பட இறைவனை வேண்டுகின்றேன்.

உங்கள் சேவை தொடர வாழ்த்துகின்றேன்.

தி. யெனிஸ்வரன் பெனடிற்

யெனிஸ்ரன்,
5 ம் வட்டாரம்,
இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

## நீர்கொழும்பில் இருந்து

மதிப்பிற்குரிய அருட்தந்தையே

பாதுகாவலன் கொழும்புக்கு வருவது காலதாமதமாக உள்ளதால் போட்டிகளின் முடிவுத் திகதியை அதிகரித்தால் நலம்

அத்துடன் தாங்கள் 18-வது கத்தோலிக்க பத்திரிகையாளர் மாநாட்டிற்கு France சென்று வந்ததை தொடராக எழுதினீர்கள் அது Feb மாதத்திற்கு பின் தொடரவில்லையே ஏன்?

எமது பாதுகாவலன் சந்தாக் கட்டணம் முடிவடைந்து விட்டதா? இல்லையா? என்பதை தயவு செய்து அறியத் தரவும். பாதுகாவலன் பணியகத்தின் விலாசத்தையும் பத்திரிகையில் அறியத்தரவும்.

பாதுகாவலன் பத்திரிகை எமது வாழ்விற்கு மிகவும் பயன் உள்ளதாய் அமைந்துள்ளதுடன், வன்னி நிலமை பற்றிய உண்மைச் செய்திகளையும் அறியக் கூடியதாய் உள்ளது. நன்றி.

இப்படிக்கு
உண்மையுள்ள
N. Navamala
Miss N. M. Navamala
3 St. Sebastians Road
Negombo.

## பாதுகாவலன் ஆசிரியர் அவர்கட்கு!

இடம்பெயர்வுகளும் இழப்புக்களும் தொடரும் இன்றைய போர்க்காலச் சூழ்நிலையிலும் கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தும் தொடர்பு சாதனமாக பாதுகாவலன் பத்திரிகை வெளிவருவது மிகவும் சிறப்பானதாகும். இலங்கைக் கத்தோலிக்க சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளையும் உலகக் கத்தோலிக்க சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளையும் இப்பத்திரிகையினூடாக ஓரளவு அறியக் கூடியதாக இருப்பது வரவேற்கத்தக்கதாகும். குறிப்பாக உலக நோக்கு என்னும் பகுதி மிகவும் சிறப்பானதாகும். இவ்வாறாக விவிலியப் போட்டிகள், புனிதர்களின் வரலாறு, காவலன் கண்மணிகள் என்பன பாராட்டத்தக்கதாகும்.

வாரப் பத்திரிகையாக வெளிவந்த பாதுகாவலன் மாதம் ஒரு பத்திரிகையாக வெளிவருவது மிகவும் வேதனைப்பட வேண்டியதொன்றாகும், வெளியீட்டிற்கு இடையே மிக நீண்ட இடைவெளி காணப்படுவதால் தொடர்புத்தன்மை அற்ற நிலை உருவாக இடமேற்படுகிறது. உடனுக்குடன் செய்திகளைப் பிரசுரிப்பது பத்திரிகைக்கு முக்கியமானதாகும். ஆனால் சில செய்திகள் வேறு பத்திரிகையில் பிரசுரமாகியபின் இதில் பிரசுரமாவதால் பாதுகாவலனை இரண்டாம் பட்சமாக பார்க்கும் நிலை உருவாக இடமேற்படுகிறது.

தொடர் கட்டுரைகள், சிறுகதை, கவிதை, புதுக்கவிதை என்பன இடம்பெற்றால் சிறப்புடையதாக அமையும். இன்று உயர்தர வகுப்பில் கிறிஸ்தவத்தை ஒரு பாடமாக கல்வி கற்கும் மாணவர்கள் அதிகம், அத்துடன் G. A., Q. B. A. என்பனவற்றிலும் கிறிஸ்தவம் சிறப்பிடம் பெறுகிறது. எனவே அவற்றுடன் தொடர்புடைய வினாக்கள், மீட்டல்கள் பாடப் படிப்புக்களை தொடர்புடையவர்களின் ஒத்துழைப்புடன் பிரசுரிப்பது மாணவ சமுதாயத்திற்கு பயனுள்ளதாக அமைவதுடன் மாணவர் மத்தியில் வாசிப்பை தூண்டுவதாகவும் அமையும்.

இன்றைய சூழ்நிலையில் இளைஞர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்துவது பத்திரிகைகளின் சிறப்பான பணியாகும். கவர்ச்சிகளையும் சினிமா மாயைகளையும் படித்து அழிவின் பாதையில் சென்றுகொண்டிருக்கும் இளைஞர் சமூகத்திற்கு விழிப்புணர்வையும் தட்டிக்கொடுப்பையும் வழங்கக் கூடியவிதமாக இளைஞர் பகுதியொன்றை ஆரம்பித்து அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஒரு பகுதியை அமைத்தால் பயன்படக்கூடியதாக அமையும் எனக் கருதுகிறேன்.

**யோ. மாலினி**

---

அன்புடன் பாதுகாவலன் ஆசிரியர், மற்றும் அனைவருக்கும்,

இறை இயேசுவின் நாமத்தில் என் வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் இத்தால் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் எங்களுக்குப் இப்பொழுது பெரும்பாலும் பத்திரிகைகள் கிடைக்கின்றன. அவற்றை வாசிக்கின்றபோது மிகவும் சந்தோஷமும், பெருமையும் அடைகின்றேன். தற்பொழுது மிகவும் நல்ல விதத்தில் பத்திரிகையின் வளர்ச்சிகள் சென்று கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்றாக நான் இதை நினைக்கின்றேன்.

உண்மையிலேயே இந்த இக்கட்டான கால நேரத்திலும் கூட நீங்கள் உங்கள் பணியை நல்ல விதத்தில் மக்களுக்குப் பலனளிக்கக்கூடிய விதத்தில் செய்து வருகின்றீர்கள் என்பதை நினைக்கின்றபோது மகிழ்கின்றேன். இதனால் எங்கள் விசுவாசம் வளர்வதோடு எங்கள் அழைப்பின் பயனும் நிறைவேறுகின்றது என்றே நான் நினைக்கின்றேன், படைப்பிற்கெல்லாம் நற்செய்தி சொல்லுவதில் பத்திரிகைகள் கூட பெரும் பங்கை வகிக்கின்றன, இதற்கு எங்கள் பாதுகாவலன் சான்றாக திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை.

இத்தால் உங்களின் இப்பணி சிறப்புற என் அன்பின் வாழ்த்துக்களையும், ஆண்டவனின் ஆசீரையும் உங்கள் அனைவருடனும் பகிர்ந்து நிற்கின்றேன்.

நன்றி.

என்றென்றும் இறையாசீருடன்,
பிதா. ஜே. பி. தேவராஜா
SEDC
Colombo.

(தொடர்ச்சி 7ம் பக்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலியில் இருந்து

பாதுகாவலன் ஆசிரியர் அவர்கட்கு!

வணக்கம். தங்களால் வெளியிடப்படும் பாதுகாவலன் பத்திரிகை பற்றிய சில குறிப்புக்களைத் தருவதற்கு முன் வந்துள்ளேன். இலங்கையில் வெளியிடப்படும் ஒரேயொரு கத்தோலிக்க பத்திரிகையான பாதுகாவலன் மிகவும் தரம் வாய்ந்ததும், மக்களின் மனத்தை ஈர்த்து நிற்கும் பத்திரிகையாகவும் அமைந்துள்ளது என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

ஆரம்ப காலப்பகுதிகளில் வெளிவந்துள்ள இப்பாதுகாவலன் பத்திரிகையை விட சக காலத்தில் வெளிவரும் இப்பத்திரிகையானது மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது. பாதுகாவலன் என்றால் இது கிறிஸ்தவ மக்களுக்கு மட்டுமே உரியவை ஆன்மீகத்தில் வாழ்பவர்களுக்கு மட்டுமே இது சொந்தம் என்ற தவறான கொள்கை அன்றிருந்தது. ஆனால் இன்று இப்பத்திரிகையானது எம் கரங்களில் தவழும் போது நாம் அறிந்து நிற்பது என்ன? ஒவ்வொரு பங்கிலும் நடைபெறும் பல்வகை நிகழ்வுகளையும், எமது மறை மாவட்டத்தில் மட்டுமல்ல, அனைத்து மறைமாவட்டங்களிலும் நடைபெறும் சகல கிறிஸ்தவ நிகழ்வுகளையும் புதிய கண்ணோட்டங்களையும் காணமுடிகின்றது.

மேலும், இப்பத்திரிகையானது நாட்டில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும், கிறிஸ்தவ கண்ணோட்டத்தின் ஊடாக எமக்கு எடுத்துக்கூறி நிற்கின்றது. ஆரம்ப காலங்களில் எம் பங்குகளில் இப்பத்திரிகையின் பலாபலன்களும், அவசியமும், முக்கியமாகத் தென்படவில்லை. பங்குகளில் பெரும்பான்மையோர் கத்தோலிக்கராக இருந்தும் – மிகவும் குறைந்த தொகையினரே இப்பத்திரிகையை விரும்பிப் படித்தனர்.

ஆனால் இன்றைய நிலையில் எல்லோராலும் விரும்பிப் படிக்கக்கூடிய ஒரேயொரு கத்தோலிக்க பத்திரிகை பாதுகாவலனே என்றால் அது மிகையாகாது. ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்விலும் ஆன்மீகம் முக்கியமானது என்பதை இப்பத்திரிகை வெளிக்கொணர்கின்றது.

மேலும், எம் தாய் திருச்சபையின் தலைமைப்பீடமான வத்திக்கான் நகரில் இருந்து யாழ் நகர் வரை எம் கிறிஸ்தவத்தின் நிலைப்பாடுகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது. மனிதனுக்கு ஆன்மா மட்டுமல்ல உடலும் உண்டு என்பதை நிருபிக்க, பத்திரிகையானது மனிதன் தன்னைச் சுற்றியிருக்கும் உலகின் சமகால நிகழ்வுகளைப் பற்றி ''சுடச் சுட'' அறிவதற்கு இப்பாதுகாவலன் பத்திரிகை பெரிதும் துணை புரிகின்றது.

கூடிய தொகையில் விற்பனையாகும் பத்திரிகையிலும் பார்க்க, குறைந்த தொகையில் விற்பனையாகும் இப்பத்திரிகையின் மாண்பினை எவ்வாறு கூறமுடியும்.

வேதாகமம், மறையுரைகளில் செவிமடுக்கும் இறைவார்த்தைகள்- இப்பாதுகாவலனில் மிகவும் தெட்டத் தெளிவாகவும், எளிய நடையிலும் கையாளப்படுவது - பாராட்டத்தக்கது. ஒவ்வொரு புனிதர்களின் வாழ்க்கை வரலாறும் அவர்களது விஷேட தினங்களையும் இப்பத்திரிகையின் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

இப்பத்திரிகை பலதரப்பட்டவர்களுக்கும் ஏற்றதாக அமைந்துள்ளது என்று கூறலாம். ஒவ்வொரு வயதினரின் மனக்கருத்துக்களை ஆழமாக அறிந்து அதற்கேற்ற வகையில் அவர்களது, உலக வாழ்வு சரி ஆன்மீக வாழ்வு சரி, சீர்திருத்தம் பெற வழிகாட்டி நிற்கின்றது என்பதைக் கூறிக் கொள்கின்றோம்.

மேலும் இப்பத்திரிகையானது இன்னும் சிறப்புறவேண்டின் பின்வரும் விடயங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். மாதத்திற்கிருமுறை வெளிவரும் இப்பத்திரிகையின், ஒரு முக்கிய செய்தியையாவது பங்குத்தந்தையர் தமது ஞாயிறு மறையுரையில் மக்களுக்கு எடுத்துக்கூறி விழிப்படையச் செய்தல் சிறந்தது. ஏனெனில் பங்கில் எல்லோரும் பாதுகாவலன் படிப்பதென்று கூறுவதற்கில்லை. பங்குகளிலே தொகையானவர்கள் இருந்தும் கூட ஓர் சிலரே இப்பத்திரிகையை விரும்பிப்படித்து வருகின்றனர். இதற்கு பங்குத்தந்தை பல பத்திரிகை ஊக்குவிப்பாளரைத் தெரிவுசெய்து பணிசெய்ய ஊக்குவிக்க வேண்டும்.

தற்காலம் இளைஞருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் காலமாக அமைந்துள்ளதால், இளைஞர்களைக் கவரத்தக்கதான, பல்வகை செய்திகளை, கதைகள், கட்டுரைகளை அறிமுகம் செய்து அவைகளினூடாக இளைஞரின் எதிர்கால வாழ்வுக்கு ஓர் மறுமலர்ச்சியைக் கொடுக்கலாம்.

இன்றைய சிறுவர்கள் நாளையத் தலைவர்கள் எனவே அவர்கள் உள்ளத்தைக் கவரத்தக்கதாக துணுக்குகள், சிறு கதைகள், நொடிகள், போட்டிகள் மூலாக அவர்களது கிறிஸ்தவ வாழ்வை வளம்படுத்தலாம்.

தவம் [illegible]



# விவிலிய ஏடுகளைப் புரட்டுவோம் - அருள்திரு ம. இ. பயஸ்

## கடவுள் ஆபிரகாமைச் சோதிக்க விரும்பினார்

கடவுள் ஆபிரகாமைச் சோதிக்க விரும்பினார். அவர் ஆபிரகாமிடம் ''நீ அன்பு செய்யும் உன் ஒரே மகனை அழைத்துச் சென்று எனக்கு எரிபலியாய் ஒப்புக்கொடு'' என்றார். மறுநாள் காலை ஆபிரகாம் தம் கழுதையைக் கொண்டு வந்து அதில் விறகுக் கட்டையை ஏற்றினார். பின்னர் அவர் தம் வேலையாட்களையும் மகனையும் அழைத்தார். அவர்கள் மூன்று நாள் பயணம் செய்து ஒரு மலையை அடைந்தனர். அங்கே ஆபிரகாம் தன் வேலையாட்களையும் கழுதையையும் விட்டார். ''இங்கே தங்கியிருங்கள் ஈசாக்கு என்னுடன் மலை மேல் வருவான் நாங்கள் செபம் செய்து பலி செலுத்திய பின் திரும்பி வருவோம்'' என்றார்.

ஈசாக்கு விறகைச் சுமந்து சென்றான். ஆபிரகாம் கத்தியையும் எரியும் கரி அடங்கிய பானையையும் எடுத்துச் சென்றார். ஈசாக்கு அவரிடம் ''அப்பா, நமக்கு விறகும் நெருப்பும் உள்ளன. ஆனால் பலியிட செம்மறி இல்லையே'' என்றார், ஆபிரகாமோ ''கடவுள் அதைத் தருவார் என்றார். மலையில் ஆபிரகாம் ஒரு கல்பீடம் அமைத்து விறகை அடுக்கினார். பின்னர் தம் மகன் ஈசாக்கைக் கட்டி பீடத்தின் மேல் கிடத்தினார் கத்தியை எடுத்தார். அந்நேரத்தில் ஒரு குரல் கேட்டது. ''ஆபிரகாம்! பையனுக்குத் தீங்கு செய்யாதே. எனக்கு கீழ்ப்படிவதற்கும் என்னை நம்புவதற்கும் நீ தயார் எனக் காட்டிவிட்டாய். உன் ஒரே மகனையே பலியிடத் துணிந்துள்ளாய்'' என்றது அக்குரல்.

ஆபிரகாம் உற்றுப் பார்க்கையில் முட்செடியில் மாட்டிக் கொண்டிருந்த ஆட்டுக்கிடாய் ஒன்று தென்பட்டது. அவர் அக்கிடாயைப் பீடத்தின் மேல் வைத்து கடவுளுக்கு எரிபலி செலுத்தினார். பின்னர் ஈசாக்குடன். மலையிலிருந்து இறங்கினார் (தொடக்கநூல் 22)

ஆபிரகாம் தன் மகனைப் பலியாக்கத் தயங்காததனால் இறைவன் தனது உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார். நாடோ தனிப்பட்டோரோ வெகு இக்கட்டான நிலையில் இருக்கும் போது மனித பலியைப்பற்றி சிந்திக்கும் குறிப்புகள் பழைய ஏற்பாடு முழுவதும் காணப்படுகின்றன. தங்களின் குழந்தைகளைப் பலியிடுதல்பழையஏற்பாட்டில் சில இடங்களில் வருகிறது. (2 அர 3:27, 16;3, 17:17, மீக். 6:6–7) ஆபிரகாமின் வரலாற்றில் இறைவன் சிறப்பான முறையில் இடையீடு செய்து, இப்பலியை நிறுத்துகிறார். எல்லாத் தலை முறைகளுக்குமே நிறுத்துகிறார்.

(வளரும்)

# இயேசுக்கிறிஸ்து உலகின் ஒரே இரட்சகர்

## புதிய வாழ்வின் அப்பம்

சிலுவைப்பலி மீண்டும் நிகழ்வதில்லை. யேசுநாதரின் வரலாற்றுச் சம்பவங்கள் மீண்டும் நிகழ்வதில்லை. ஆனால் திருவருட்சாதன நிகழ்வில் இவை பிரசன்னப்படுத்தப் படுகின்றன.

இறைமகனாகிய கிறிஸ்துவின் வரலாற்று மறைபொருள்கள் எல்லாம் திருவழிபாட்டில் அடங்கியுள்ளன. தாயின் கருவில் உருவாகிய கணத்திலிருந்தே இயேசு இறைவனின் மகிமைக்காகவும், உலகின் வாழ்வுக்காகவும் உயிர்ப்புக்காகவும் தம்மை ஒப்புக்கொடுத்தார். அவரது பலியின் உச்சகட்டம் அவரது சிலுவைப் பாடுகளாகும். அதன் பலன் அவரது உயிர்ப்பு. மக்கள் இறைவாழ்வில் பங்குகொள்வதே மீட்பின் கொடையாகும்.

இறந்த காலத்தை நிகழ்காலமாக்கும் நற்கருணைப்பலி வருங்கால மகிமையையும் எதிர்நோக்குகின்றது. திருப்பலியின் நடுவில் உச்சரிக்கப்படும் ''கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து உயிர்த்தார், கிறிஸ்து மீண்டும் வருவார்'' என்னும் ஆர்ப்பரிப்பில் இது வெளிப்படுத்தப்படுகின்றது.

''இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்னும் இயேசுவின் கட்டளைக்கு ஒரு சமூகமாகவே பணியவேண்டும். நற்கருணை தனிப்பட்ட ஒருவரின் விடயமல்ல. மாறாக அது எப்போதுமே திருச்சபையைக் கட்டியெழுப்பும்படி மேற்கொள்ளப்படும் திருச்சபையின் செயற்பாடாகும். தனது அடையாளத்திற்கும் பணிக்கும் ஊற்றும் கொடுமுடியுமான கிறிஸ்துவின் பாஸ்கா நினைவுப்பலியை கிறிஸ்தவ சமூகம் எப்போதும் நிறைவேற்றி வந்துள்ளது. ஆகவே ஞாயிற்றுக்கிழமைகளில் ஆண்டவரின் பெயரால் ஒன்றுகூடி, வார்த்தையினாலும், வாழ்வின் அப்பத்தினாலும் ஊட்டம் பெறுவது கிறிஸ்துவின் கட்டளைக்குப் பணிவதாகும். நாம் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டு ''இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்ற இயேசுவின் கட்டளையை அசட்டை செய்ய முடியாது.

(வளரும்)

# பருத்தித்துறையில் இருந்து....

பத்திராசிரியர் அவர்களுக்கு பணிவாக அறியத் தருவது, அன்னை திரேசாவின் இரண்டாம் ஆண்டு நினைவையொட்டி புரட்டாசி மாத பாதுகாவலனில் அவரின் வாழ்வில் செய்த சேவைகளைப் பாராட்டி கவிதைகள் எழுதப் பட்டிருந்தன. அதேவேளை அன்னை திரேசாவின் கேள்வி பதில் கடந்த ஆண்டுப் பாதுகாவலனிலே வாசித்தது ஞாபகத்திற்கு வருகின்றது. அது என்னவென்றால் இந்த உலகத்திலே, ஏழைகளை உருவாக்கியவர்கள் யாரென்றால் அதற்குப் பதில். ஒவ்வொரு மனிதனும் ஏழைகளை உரு [illegible] இருந்ததை வாசித்தோம். இதை காவலனை வாசிக்கும் ஒவ்வொரு இறை மக்களும் வாசித்துத் தான் இருப்பார்கள். இது ஒவ்வொரு கிறீஸ்தவனும் நன்கு சிந்தித்து செயலாற்ற வேண்டியதொன்று. எனவே இப்பணிக்குரிய காலம் இக்காலம் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து நாம் பெற்ற ஞானஸ்தான வாழ்வுக்கமைய ஒருவருக்கொருவர் பணி செய்து எல்லோரும் சமவாழ்வு வாழ்ந்து யேசு எம் ஒவ்வொருவருக்கும் தந்த நற்செய்திப் பகிர்தலில் முழுமையாக ஈடுபட்டு அன்னை திரேசாவின் இலட்சியத்தை நிறைவு செய்வதே உண்மையான கிறீஸ்தவ வாழ்வு என்பதை ஒவ்வொரு வாசக நேயர்களும் உணர வேண்டும். திருச்சபையோடு இணைந்து அதற்குரிய செயல்பாடுகளை ஒவ்வொரு பங்கு மட்டத்திலும் பக்திச்சபைகள் இருப்பதுபோல்ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டோருக்காக ஒரு அமைப்பை உருவாக்கி அதன் மூலம் அன்னை திரேசாவின் சிந்தனைக்கு தெளிவு கொடுத்தால் உலகளாவிய ரீதியில் அவரின் பணி மெச்சப்பட்டது போல எங்கள் வாழ்வும் இறைவனுக்கேற்ற வாழ்வாக அமையும்,

இறை அடியான்
க. செபமாலை
வயது 62
பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கண்மணி



| | |
|---|---|
| ஒளி : 11 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர் : 04 | எம் வாழ்வின் வழி யேசு |

## உலக வாழ்வில் — ஜெயம்

I

இன்ப துன்பம் உலக வாழ்வில்
இருளும் ஒளியும் போலே
துன்பம் என்று நொந்தி டாது
துணிவு கொண்டு வாழ்வோம்

II

நன்மை, தீமை உலக வாழ்வில்
நமது செய்கைப் பேறு
மென்மையான இதய மொடு
மேன்மை கொண்டு வாழ்வோம்

III

ஏழ்மை செல்வம் உலக வாழ்வில்
எங்கும் வந்து போகும்
தாழ்மை கொண்டு நாம் அடங்கித்
தலை நிமிர்ந்து வாழ்வோம்

IV

நாங்கள் இந்த உலக வாழ்வில்
நமது கடமை ஆற்றி
ஓங்கும் அன்பு, உண்மை போற்றி
உதவி யொன்றி வாழ்வோம்

அன்புக் கண்மணிகளே!
நற்கருணை நாதரின் நல்லாசிகள்
உங்களுள் நிறைவதாக.
காலக் கண்ணாடியில்
உங்களுக்காகப் பாதுகாவலனைப் பார்த்தேன்.
125 ஆண்டுப் பணியில் பாதுகாவலர் சிறுவருக்காகத்
தந்த நல் முத்துக்களைச் சேகரித்தேன்.
அவற்றை உங்களுக்காக இங்கு தருகிறேன்.
படித்துப் பயன் பெறுங்கள்.
முத்துக்களுக்கு உரித்தான நம் முன்னோடிகளுக்காக
இறை ஆசியுடன் நன்றி கூறும்.

அன்பின் அன்புவிழி

## மனிதனாய் வாழ்!

சமூகக் கோட்டைக்குள் நீ
சமாதியாக வேண்டாம்
சுமூகச் சிந்தனைக்குள் நீ
சுகங்காண முயல்!

சாதி வெறி கொண்டு நீ
சாதிக்க வேண்டாம்
பாதியதைக் கொடுத்து நீ
பாக்கிய வானாகிடு!

மதவெறி கொண்டு நீ
மனம் பிரிக்க வேண்டாம்
மதமனம் தகர்த்து நீ
மனிதனாய் வாழ்!

பெண்ணியம் பேசி நீ
பெருமை கொள்ளவேண்டாம்
கண்களாய் அவளை நீ
காத்திடு போதும்!

விடுதலை இன்றி நீ
வீதியிலலைய வேண்டாம்
நடுநிலை மனதாய் நீ
நடந்திடு உலகில்!

உணர்வுகள் பூட்டி நீ
ஊமையாய்ப் போகவேண்டாம்
மணமதாய் வீசி நீ
மனிதத்தை மலர்த்திடு!

ஆ. ஜென்சன் றொனால்ட்,

# அன்பிய வாழ்வே நற்கருணை வாழ்வின் வெளிப்பாடாகும்

அருள்திரு C. J. அன்ரனிபாலா

யூபிலி ஆண்டுக்கு ஆயத்தம் கடந்த மூன்று வருட ஆயத்தங்களையும் பின் நோக்கிப் பார்க்கின்ற வேளையில் ''யேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்,'' எனவும் ''அர்ச்சித்துப் புனிதப்படுத்தும் தூய ஆவியே வாரும்'' எனவும் ''எழுந்து என் தந்தையிடம் செல்வேன்'' எனவும் மூன்று மையக்கருத்தைக் கொண்டு திரித்துவ குழுமவாழ்வு பற்றி சிந்தித்து பல்வேறு ஆயத்தங்களைச் செய்தோம். அதாவது அயலவருடனும் இறைவனுடனும், நாம் ஒப்புரவாகி, தந்தையை நோக்கிய எமது ஆன்மீகப் பயணத்தில், எமது விசுவாசத்தைப் புதுப்பிக்க வேண்டும் என இம்மூன்று ஆண்டு கால ஆயத்த செயற்பாடுகளும் எமக்கு அறிவுறுத்தின. இரண்டாயிரம் திருவழிபாட்டு ஆண்டை ஆரம்பிக்கும் எமக்கு மையக் கருத்தாக ''இயேசுக்கிறிஸ்து உலகின் ஒரே இரட்சகர், எமது புதிய வாழ்வின் அப்பம்'' என்னும் கருப்பொருள் பரிசுத்த திருத்தந்தையினால் தரப்பட்டுள்ளது. நற்கருணை எமது வாழ்வின் ஊற்றும், மையமும் உறைவிடமுமாகும் என நாம் சிந்தித்து அதன்வழி செயலாற்ற அழைக்கப்படுகின்றோம்.

15. 05. 2000 எமது யாழ். மறைமாவட்டத்தில் நடந்து முடிந்த மேய்ப்புப்பணி மாநாட்டின் மையக் கருத்து ''புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக மலர'' என்பதாகும், இதை நோக்கும் வேளையில் எமது மறைமாவட்டத்தின் ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறையாக, இன்றியமையாத செயற்பாடாக முன்னெடுக்கவேண்டிய பணி, சிறிய கிறிஸ்தவக் குழும வாழ்வை எல்லாப் பங்குகளிலும் வாழ்வதாகும். இதுவே இன்றைய யாழ். திருச்சபையின் தேவையும் இலக்குமாக இருக்கின்றது.

(வளரும்)

# பண்பாட்டில் மனிதம் எங்கே?

பண்பாடு, கலாச்சாரம், மனிதம், மனிதநேயம் இவை இன்றைய நாட்களில் பரவலாக பேசப்படுகின்ற கலைச் சொற்கள், ஆனால் இவற்றின் உள்ளார்ந்த அர்த்தங்களை புரிந்து கொள்ள மனிதர்களாகிய நாம் தவறிவிட்டோம். ஒரேமாதிரியான உடையும், மொழியும், நிறமும், இலக்கியமும் எம்மை ஒரே பண்பாட்டினராக மாற்றிவிடாது. பண்பாடு ஒரு சமூகத்தின் ஆன்மா, பண்பாடு இல்லாமல் ஒரு சமூகம் இல்லை. சமூகம் இல்லாமல் பண்பாடு இல்லை. இரண்டும் ஒன்றையொன்றிலிருந்து பிரிக்கமுடியாதவை. மனிதன் பண்பாட்டை உருவாக்குவதுபோல் பண்பாடு மனிதனை உருவாக்குகிறது. இந்த உருவாக்கப்படுகின்ற பண்பாட்டில்தான் நாம் மனிதத்தை தேடவேண்டியுள்ளது. மனிதன் பண்பாட்டு வெளியீட்டுக்கருவிகளான மொழி, இலக்கியம், தொழில்நுட்பம், சமயம், ஏனைய மதிப்பீடுகள் போன்றவற்றில் ஏற்படுத்துகின்ற துரிதமான மாற்றங்களும் வளர்ச்சிகளும் எவ்வளவு தூரம் மனிதனை மனிதனாக, பண்பாடு உள்ளவனாக வளர்க்கிறது என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஒரு பண்பாடு ஒருபோதும் தன்னை உயர்த்துவதற்காக இன்னுமொரு பண்பாட்டினதோ அல்லது இனத்தினதோ அழிவை எதிர்பார்ப்பதில்லை, இன்னுமொரு பண்பாட்டினை மதிப்பதனூடாகத்தான் எமது பண்பாட்டின் பெருந்தன்மையையும், மதிப்பீடுகளையும் வெளிப்படுத்த முடியும். ஆனால் இன்று மனித சமூகத்தில் நடப்பது என்ன? பண்பாடு, கலாச்சாரம் என்ற பெயரில் இனங்களிடையே, மொழிகளுக்கிடையே, நாடுகளுக்கிடையே போரும் பூசலும், போட்டியும் பொறாமையும் வளர்க்கப்படுகின்றன. பண்பாடு என்ற பெயரில் பொருட்களைச் சந்தைப்படுத்த நாடுகளிடையே போட்டி தலைவிரித்தாடுகின்றது' ஆயுதக்கலாச்சாரம் மனிதநேய கலாச்சாரமாக மாற்றப்படவேண்டிய கட்டாய நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டுள்ளான்.

போரும் பூசலும் போட்டியும் பொறாமையும்தான் உன் பண்பாடு போதிக்கும் மதிப்பீடுகளா என்பதை சற்று சிந்தித்துப்பார் சகோதரமே, உன் பண்பாட்டை, சமயத்தை, கலாச்சாரத்தை வளர்க்க வேண்டுமென பல முயற்சிகளை மேற்கொள்ளும் நீயும் நானும் எம் பண்பாடு எமக்கு சொல்லும் மனித நேய மதிப்பீடுகளை வெளிப்படுத்த மறந்தது மிகவும் வருத்தத்திற்குரியதே. ஆன்மீக அறநிலை அடிப்படையிலே பண்பாட்டு மயப்படுத்தப்பட்ட உனது சமயம் போதிக்கும் மதிப்பீடுகளும் இவற்றிற்கு எதிரானவைதான் என்பது எமக்குத் தெரியும். பண்பாட்டை வளர்க்கவேண்டுமென ஆர்வமுடைய சகோதரனே! சகோதரியே! உன்னுடைய படுகொலையாலும், பழிவாங்கலாலும், அடிமைப்படுத்தலாலும், கோபத்தினாலும், அல்ல உன்னுடைய பண்பாட்டு மதிப்பீடுகளை பகிர்ந்து கொள்வதனாலே உன் பண்பாட்டின் பெருந்தன்மையையும் மகிமையையும் அடுத்தவர்களுக்கு, அதாவது பிறபண்பாட்டினருக்கு காட்டு. அதன் மூலமாக அவர்கள் உன் பண்பாட்டினை மதிப்பார்கள் அது உனக்கும் பெருமை எனக்கும் பெருமை. இதுதான் கிறிஸ்தவர்களாகிய எனக்கும் உனக்கும் இன்றைய சமுதாயம் தரும் சவால்,

சகோ. பே, பெனிக்னஸ்
அ. ம. தி. குருமடம், அம்பிட்டிய

# சிந்திக்க ஒரு கதை

## உதவி

கடவுள் அப்போதுதான் உலகைப் படைக்கத் தொடங்கி இருந்தார்.
நான்கு வானதூதர்கள் அவரிடம் வந்து வினா எழுப்பினர்.
முதல் தூதர் கேட்டார்: 'உலகை எப்படி உருவாக்கப் போகிறீர்?'
கடவுள் பதில் சொல்லவில்லை
இரண்டாம் தூதர் கேட்டார்; 'உலகை ஏன் உருவாக்க வேண்டும்?'
கடவுள் அதற்கும் பதில் தரவில்லை.
மூன்றாம் தூதர் கேட்டார்: 'உலகைப் படைத்ததும் என் பொறுப்பில் விடுவீரா?'
கடவுள் அதற்கும் பதில் தரவில்லை.
நான்காம் தூதர் கேட்டார்: 'நான் உதவிக்கு வரலாமா?'
கடவுளின் முகம் மலர்ந்தது. 'வா என்றார்.

முதல் வினா அறிவியல் மனிதனின் கேள்வி.
இரண்டாம் வினா தத்துவ மேதையின் அறிவிப்பு.
மூன்றாம் வினா சுயநலவாதியின் பண்பு.
நான்காம் வினா ஞானியின் உரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சகலா நினைவலைகள்

மண்ணில் 02 - 04 - 1918



விண்ணில் 04 - 08 - 2000

### அருள்சகோதரி லூமினா செல்லத்துரை

**Holy Family Convent**

இளைப்பாறிய அதிபர்

"வாருங்கள் யா்வரும் மகிழ்வோம் ஏனெனில்,
விண் வீட்டில் யாவரும் வாழ்கின்றனர்."

இவரின் ஆன்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுவோம்.

*தபாற்கந்தோரடி,*
*நெல்லியடி,*
*கரவெட்டி.*

தகவல்
திருமதி டொ.மன்மதநாயகம்
(மருமகள்)

## ST. PATRICK'S COLLEGE, JAFFNA

எல்லா வகுப்புக்களும் 3ஆம் தவணைக்காக 28.08.2000 அன்று கல்லூரியில் காலை 8.30மணிக்கு ஆரம்பமாகும். ஒரு வார மீட்டல் வகுப்புக்களைத் தொடர்ந்து 2ஆம் தவணைப் பரீட்சைகள் நடைபெறும்.

### புதிய அனுமதி ~ 2001

விண்ணப்பப் படிவம் (பரீட்சைக் கட்டணம் உட்பட) 200ரூபா, 30-08-2000 இலிருந்து 28-09-2000 வரை பாடசாலை நாட்களில் மு.ப. 9.30இலிருந்து பி.ப. 1.30வரை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 28-09-2000 திகதி பி.ப. 12.30 மணிக்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் நேரில் வந்து ஒப்படைக்கவும்.

தபால் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

❖ தரம் 1க்கு விண்ணப்பிக்கும் பிள்ளைகள் 01-02-1995க்கும் 31-01-1996க்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.

❖ தரம் 6க்கு விண்ணப்பிக்கும் பிள்ளைகள் 01-02-1990இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருக்க வேண்டும்.

ஏனைய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்களையும் அலுவலகத்தில் இதே நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அனுமதிப் பரீட்சை 07-10-2000 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

சமூகம் தரவேண்டிய நேரம் - காலை 8.30 மணி

நாட்டுநிலைமை காரணமாக திடீர் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டியிருப்பின் அது குறித்து பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

*- அதிபர்.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 - 11 - 1916



உதிர்வு 28 - 07 - 2000

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

செபம்

பிறப்பும் இறப்புமற்ற நித்திய தந்தையே!, மனிதருக்கு மரணம் உண்டு. ஆனால், உம் அன்பிற்கோ முடிவு இல்லை, ஆண்டவரே! உமது விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை. உம் அடியார்களின் ஆன்மாவிற்கு இளைப்பாற்றியின் இடத்தையும் அமைதியின் இன்பத்தையும் முடிவில்லா ஒளியையும் அளித்தருளும். உமது அன்பின் நித்தியமாய் இணைந்த அடியானாகிய அன்பு கபிரியேல் மாட்டீன் என்பவரை நித்திய பேரின்ப இராட்சியத்தில் வாழ இடமளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் சனிக்கிழமை (26.08.2000) 11.30 (பு.நே.) மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

*15A ஈச்சமோட்டை,*
*கடற்கரை வீதி.*
*யாழ்ப்பாணம்.*

இவரின் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

## விண்ணக வாழ்வில் 31ஆம் நாள் நினைவஞ்சலி



### கிளைமென்ற் யேசுதாசன்

(ஆயுள்வேத வைத்தியர்)

மண்ணில் 07-04-1943

விண்ணில் 25-07-2000

"இறந்தோரிடமிருந்து இயேசுவை
உயிர்ப்பித்த இறைவன், தம்முடைய
ஆவி நம்முள் குடிகொண்டிருப்பதால்,
சாவுக்குரிய நம் உடல்களையும்
உயிர்பெறச் செய்வார்".
(உரோ. 8:11)

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.

இறைவா என்னைப் பாதுகாரும். உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன். (சங். 15:1)

## இறையடியில் 2ஆம் ஆண்டு

பிறப்பு 10 - 10 - 1924



இறப்பு 25 - 08 - 1998

### சுவாம்பிள்ளை பற்றிக்

அறிவினால், பண்பினால் உயர்ந்து
நேசமாய் பாசமாய் வாழ்ந்து
நெஞ்சங்களெல்லாம் நிறைந்து
நீங்கா நினைவிலெல்லாம் நின்று
நித்தமும் எம் கண்முன் தோன்றும்
எம் தலைவனே, ஐயா!
நீர் இறைபதம் சேர்ந்து
இரண்டாண்டு கழிந்தும் இன்று
கலங்கி கண்ணீர் மல்கி அஞ்சலி செய்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

*இல. 40, புதுவீதி,*
*1ஆம் ஒழுங்கை,*
*கொய்யாத்தோட்டம்.*

## IN LOVING MEMORY OF



**FRANCIS NICHOLAS CLARENCE (F.N.C.) SAVERYMUTTU**

(Teacher St. Patrick's College)

**Died 1st April 1975**

IMELDA SELVARANEE SANTHIAPILLAI (Wife)
Died 12th Oct. 1988

YOGENDRAN XAVIER (Son)
Died 4th Oct. 1975.

Fondly remembered by daughters Bernadette Emmanuel, Bernadine Yogarajah, Marie Mathuranayagam & grand children Maria, Eugene, Michelle, Ilin & Christy.

**Memorial mass was said at St. Antony's Church, Kollupitiya at 6.15 p.m. on Saturday 1st April 2000.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 - 03 . 09



ஆண்டவன் அடியில் 09 - 08 - 00

### அருளப்பு மரியாம்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

ஆண்டவன் அருளால் எம் எழுவரை
இவ்வுலகிற்கு ஈன்ற எந்தையே!
சாம பேத தான தண்ட உளிகளால்
எம்மைச் செதுக்கி உருவாக்கி
இருவரை ஆண்டவன் பணிக்கு ஈந்த தந்தையே!
பூலோகந் தன்னில் உம்மை அன்புசெய்த
உம்மைந்தர் மூவர் உம் பரலோக யாத்திரையில்
கண்ணீரால் உம் கால்கழுவி, கல்லறைக்கு
உமைச் சுமந்து கையளவு மண்ணையிட்டு
தம் நன்றிக் கடன் செலுத்தும் நற்பேறு
கிடையாது உள்ளம் உருகி உருக்குலைகின்றனரே!
அம்மாவோடு எம் எழுவா உள்ளக் குமுறல்களையும் மலராக்கி உம்பாதம் வைத்துப் பூசிக்கின்றோம்.
ஐயா!, உம்மை அழைத்த தேவன் உமக்கு நிறை சாந்தி அளித்திட வேண்டி நிற்கும்.

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 125வது ஆண்டு கட்டுரைகள், விளம்பரங்கள்

பாதுகாவலன் பத்திரிகையின் 125வது ஆண்டு நிறைவு எதிர்வரும் மாசி மாதம் 19ஆம் திகதி என்பது வாசகர்கள் அறிந்ததே. 125 ஆண்டு நிறைவிலே 125 பக்கங்கள் கொண்ட நினைவு மலர் ஒன்றினை நாம் வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

மேற்படி மலரில் பாதுகாவலன் பத்திரிகையின் ஆரம்பம், வரலாறு, வளர்ச்சி, பாதுகாவலனின் பங்களிப்பு போன்ற பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.

விளம்பரங்களும், ஆசிச் செய்திகளும், வாழ்த்துக்களும், வாசகர்களின் மடல்களும் இடம்பெறவுள்ளன.

இதற்கென மலர் வெளியீட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

கட்டுரைகள் எழுத விரும்புகின்றவர்கள் தீர்வுசெய்து நேரகாலத்துடன் எம்முடன் தொடர்பு கொண்டால் உங்களுக்கான தலைப்புக்களையும் விடயங்களையும் தந்துதவ முடியும். ஒரே மாதிரி ஆக்கங்கள் வெளிவராமல் இருக்காமலும் கட்டுரைகளின் தரத்தினைப் பேணவும் மேற்படி ஒழுங்கினை நாம் கடைப்பிடிக்க உள்ளோம்.

தலைப்புக்களைப் பெற்று கட்டுரைகளை அனுப்பவேண்டிய இறுதி நாள் கார்த்திகை 30ஆம் தினமாகும்.

விளம்பரங்கள் போட விரும்புகின்றவர்களும் இதே ஒழுங்கினைக் கடைப்பிடிக்கவும்.

இது விடயமாக தொடர்புகொள்கின்றவர்கள் கடிதத்தின் இடது மூலையில் "பாதுகாவலன் மலர் சம்பந்தமாக", என்று எழுதி ஆசிரியர், 125வது ஆண்டு மலர்க் குழு, த.பெ.இல. 02, 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பவும்

ஏமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளவும், தரத்தினைப் பேணவும் ஒத்துழைக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

*- ஆசிரியர் -*

## G.C.E. (O/L) RELIGION பரீட்சைக் குறிப்புகள்

ஜீ.சி.ஈ. சாதாரண தர சமய பாடத்துக்கான கடந்த கால வினா விடைகள், பாடத்திட்டம், பரீட்சைக்கு பதில் எழுதும் முறை போன்ற வழிகாட்டுதல் குறிப்புக்கள் அடுத்த பாதுகாவலனில் தொடங்கி பரீட்சைவரை விசேடமாக இணைக்கப்படவுள்ளன.

பரீட்சை எடுக்கும் மாணவர்கள் இப் பாதுகாவலன்களை வாங்கிப் படித்துப் பயன்பெற அழைப்பு விடுக்கிறோம்.

## பாதுகாவலன் நிருபர்களின் நெறிப்படுத்தலில்

# பருத்தித்துறையில் வாசகர் வட்டம்

பருத்தித்துறை புனித தோமையார் பெண்கள் பாடசாலையில் ஆவணி மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாதுகாவலன் வாசகர் வட்டம் அமைக்கும் நிகழ்வு ஆரம்பமாகியது. பருத்தித்துறை பங்குத்தந்தை இருதயதாஸ் அடிகளின் ஒழுங்கமைப்பில் பருத்தித்துறை, சக்கோட்டை, பொலிகண்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த 50ற்கும் மேற்பட்ட வாசகர்கள் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றினர். இறைவேண்டலைத் தொடர்ந்து பருத்தித்துறை பங்கின் பாதுகாவலன் நிருபரான திருமதி மரியகொரற்றி அருளானந்தத்தின் வரவேற்புரையும் அங்கத்தவர்களின் அறிமுகம் இடம்பெற்றது.

மேற்படி பாதுகாவலன் வாசகர் வட்டத்தினை பாதுகாவலன் நிருபர்களான திரு C.C. கொலிந்திரன் (நல்லூர்), செல்வி மாலினி (தின்னைவேலி), குருசுமுத்து தவம் (நவாலி), கீதப்பொன்கலன் (ஆனைக்கோட்டை), செல்வி றூபவசந்தினி (கோப்பாய்) ஆகியோர் பாதுகாவலன் ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் தலைமையில் நெறிப்படுத்தினர்.

"125ஆவது ஆண்டு நிறைவினை நோக்கி வீறுடை போடும் பாதுகாவலன் பத்திரிகை பல்வேறு இன்னல் களை சந்தித்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இருப்பினும் எம்மால் முடிந்தளவு பல பணிகளைப் புரிந்து கொண்டிருக்கின்றோம்" எனத் திரு கீதப்பொன்கலன் கூறினார். அவர் தொடர்ந்து நிருபர்களுக்கான பயிற்சி பற்றியும் எடுத்துரைத்தார்.

வாசகர் வட்டம் அமைப்பது பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் செல்வி குருசுமுத்து தவமும், செல்வி றூபவசந்தினி ஆக்கங்கள் எழுதுவது எப்படி என்றும் விளக்கமளிக்கப்பட்டது. இறுதிப் பாதுகாவலனில் வெளிவந்த பத்திமா இரகசியம் என்னும் கட்டுரையிலிருந்து போட்டி இடம்பெற்றது.

"முகம்" எனும் திரைப்படம் காண்பிக்கப்பட்டு, விமரிசன ஆய்வு செய்யப்பட்டது.

கருத்தரங்குகளுக்கு வந்தவர்களில் அவர்களின் ஆலயங்களின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு வாசகர் வட்டம் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு ஆலயத்திலிருந்தும் தலைவர், செயலாளர் தெரிவு செய்யப்பட்டுஅதன் பொறுப்பாளராக அதன் பொறுப்பாளராக செல்வி சி. வாணி நியமிக்கப்பட்டார்.

இரண்டு நாடகங்கள் அன்றைய வாசகர் வட்டத்தினரால் நடிக்கப்பட்டது. அன்றைய தின விமரிசனங்களை திருமதி நிர்மலா அருள்நேசன் எடுத்துக்கூறினார். நன்றியுரையுடனும் மற்றும் சில விளையாட்டு நிகழ்வுகளுடனும் 5.30 மணிக்கு இவ் வாசகர் வட்டக் கருத்தரங்கு நிறைவுபெற்றது.

## அல்போன்ஸின் இழப்பு பேரிழப்பாகும்!



யாழ். திருக்குடும்பக் கன்னியர் மாகாண இல்லத்தில் பணியாற்றிய கிளிநொச்சி - வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட லோறன்ஸ் அல்போன்ஸ் 01-09-2000 அன்று மாமரத்திலிருந்து தவறிவீழ்ந்து காலமானார்.

20-06-1976 இல் பிறந்த இவர் 12 வருடங்களுக்கு மேலாக M.E. பயஸ் அடிகளாருடனும், பின் கடந்த 2 வருடங்களாக திருக்குடும்ப கன்னியர்மட மாகாண இல்லத்திலும் அர்ப்பணத்துடன் பணியாற்றியுள்ளார். எந்தப் பணியைக் கொடுத்தாலும் துணிந்து, திறமையாக செய்யக்கூடிய சகலதுறை வல்லுநர் இவர். தந்தையை இழந்த இவரின் தாயாரும் 3சகோதரிகளும் 1தம்பியும் கிளிநொச்சியில் தங்கியிருக்கின்றனர்.

"நல்லவர்களுக்கு காலமில்லை என்பதைப் போல் மிகவும் அருமையான ஒரு பணியாளனை இழந்துவிட்டோம். இனி இவர் போல் ஒருவரை சந்திக்கமாட்டோம்" என அருள் சகோதரி ஒருவர் காவலனுக்கு தெரிவித்தார்.

அன்பும், பதமையும், பணிவும், கலகலப்பாக பழகும் சுபாவமும் எல்லோருக்கும் எப்போதும் உதவிசெய்ய ஆயத்தமாக உள்ள மன நிலையும் கொண்ட இவரின் இழப்பு ஓர் பேரிழப்பாகும்.

இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதி இளைப்பாற பாதுகாலன் அன்பு நெஞ்சங்களின் வேண்டுதல்களை சமர்ப்பிக்கிறோம்.

## பேராபத்திலிருந்து நாட்டை....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்துக்கான யுத்தத்தை தீவிரப்படுத்துவதிலேயே முனைப்பாயிருக்கின்றனர். இதன் விளைவுகள் மற்றொரு இரத்தக் களரியாக இருக்குமென அஞ்சுகிறோம்.

எனவேதான் குருட்டுத்தனமான, முடிவற்ற இந்த அழிவை நிறுத்துமாறு அரசையும், விடுதலைப் புலிகளையும் வேண்டிக் கொள்கிறோம். அரசியல் பேச்சுவார்த்தைகளைத் தவிர வேறு விதத்தில் இது தீர்க்கப்பட முடியாதென்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம். யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தைக்கு தக்க சூழ்நிலையை ஏற்படுத்துவது இன்றைய அவசர தேவையாகும்.

நாடு இந் நெருக்கடியிலிருந்து மீள தம்மாலான உதவியைச் செய்யுமாறு சர்வதேச சமூகத்தைக் கேட்டுக் கொள்கிறோம்." என ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நீதி, சமாதானம் சமரசத்துக்கான தேசிய இயக்கம்

இவ் இயக்கம் நாட்டின் தலைவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும், பொதுமக்களுக்கும் சில வேண்டுகோள்களை விடுத்துள்ளது.

"உலகின் நான்கு பெரிய மதங்களைச் சேர்ந்தவர்களாகிய எமக்கு இந் நெருக்கடியிலிருந்து மக்களை மீட்கும் கடப்பாடு உண்டு. குடிசன அடர்த்திமிக்க குடாநாட்டில் போரைத் தீவிரப்படுத்துவது ஆயிரக்கணக்கானோரின் மரணத்துக்கும் துன்பத்துக்கும் பொருள் அழிவுக்கும் ஏதுவாகும்.

எனவே இந்த அர்த்தமற்ற இரத்தக் களரியை தடுப்பதற்கு உடனடியாக ஆவண செய்யுமாறு அரசையும் எதிர்க்கட்சியையும் விடுதலைப் புலிகளையும் ஏனைய தலைவர்களையும் வேண்டுகிறோம்.

யுத்த நிறுத்தம் செய்து, படிப்படியாக பொருளாதார தடைகளை நீக்குவது துன்புறும் மக்களுக்கு நிவாரணமளிக்கும்.

பொ.ஐ.முன்னணியும், ஐ.தே. கட்சியும் ஆரம்பித்த உரையாடலைத் தொடர்ந்து, சகல சமூகத்தவருக்கும் நீதி கிடைக்க கூடியவிதமாக தாமதமின்றி ஓர் உடன்பாட்டுக்கு வருவதையும், அவர்கள் கூட்டாக மூன்றாம் தரப்பின் உதவியுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதையும் விரும்புகிறோம்.

நல்லெண்ணமுள்ள எல்லோரும் தேசிய சமரசத்துக்கு இடையூறான பேச்சுக்களையும், செயற்பாடுகளையும் தவிர்த்துக் கொள்ளுமாறும், சகல சமூகத்தினருக்கும் நீதி சமாதானம் கிடைக்கும்படி பிரார்த்தனையில் ஈடுபடுமாறும், உடனடியாக இனப்பிரச்சினையைத் தீர்க்குமாறு அரசியல்வாதிகளை வற்புறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குகின்ற தொடர்பு சாதனங்கள் சமாதானத்தை ஏற்படுத்துவதில் பெரும் பங்களிப்புச் செய்யவேண்டும்."

### சர்வமத காங்கிரஸ்

சர்வமத காங்கிரஸ் மதத் தலைவர்களுக்கும் பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளது.

அரசாங்கமும், எதிர்க்கட்சியும் நாட்டின் பொதுநலனைக் கருத்திற்கொண்டு, அற்ப விடயங்களை விட்டுவிட்டு இன்றைய பிரச்சினைகள் தொடர்பான அவசர விடயங்களைப் பற்றி உரையாடும்படி அவர்களுக்கு நெருக்குதல் கொடுப்பது.

பிரச்சினைக்கு விரைவாக ஒரு தீர்வு காண்பதற்கு இந்தியாவின் அரசியல் மத்தியஸ்த்தை நாடும்படி வற்புறுத்துவது.

அனைத்து உயர் மதத் தலைவர்களும் தனித்தனியாக அன்றி ஒரே குரலாக அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் உடனடியாக இக் கோரிக்கைகளை வலியுறுத்துவது.

இறுதியாக, நாட்டை எதிர்நோக்கும் அழிவுகள் நீங்கி சமாதானமும், சுபீட்சமும் கிடைக்கும்படியாக தமது மக்களைப் பிரார்த்தனைகளில் ஈடுபடுத்துவது.

## சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் வீடியோ பயிற்சி

யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழு வீடியோ பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்துள்ளது. இவ் ஆண்டின் முற்பகுதியில்புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் இந்த வீடியோ பயிற்சி வகுப்புக்கள் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன. இறுதி ஆண்டு அருள்சகோதரர்கள் இது மிகவும் பயனான ஒன்று என்றும் இதனை மற்றவர்களுக்கும் தொடர்ந்து நடத்தும்படியும் கேட்டபடியால், இப் பயிற்சி வகுப்புக்களை தொடர இருக்கிறோம் என சமூகத் தொடர்பு ஆணைக்குழு இயக்குனர் தெரிவித்தார்.

இப் பயிற்சி முதலில் பாதுகாவலன் நிருபர்கள், செய்தியாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

## மாணவர் விடியல்

இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் தமிழ்நாட்டில் வசிக்கின்ற ஈழ தமிழ் அகதிகளுக்கென யேசு சபைக் குருவினர் மாணவர் விடியல்என்ற மாணவர்க்கான ஓர் இதழினை நடத்தி வருகின்றனர். இயேசு சபை அகதிப் பணி (JRS) என்ற பெயரில் ஈழ தமிழ் அகதிகளின் நலனில் அக்கறை காட்டுகின்ற இயேசு சபையினர் பெஸ்கி இல்லம் திண்டுக்கல்லிருந்து இந்த இதழை வெளியிடுவது குறிப்பிடத்தக்கது. இதில் ஈழ தமிழ் மாணவர்கள் தம் ஆக்கங்களை ஆர்வத்துடன் எழுதி வருவது குறிப்பிடத்தக்கது.

## போரினால் அல்லற்படும்......

1ஆம் பக்கத் தொடர்ச்சி...

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக இளவாலை வேளாண்மியத்தின் காப்பாளரும் பங்குத்தந்தையுமான C.J. அன்ரனிபாலா அடிகள் கலந்துகொண்டு உரையாற்றினார். எமது கத்தோலிக்க திருச்சபையானது மக்களின் ஆன்மீக விடுதலையை மட்டுமன்றி முழுமனித விடுதலையையும் நோக்காகக் கொண்டு செயலாற்றி வருகின்றது. அந்தவகையில் யாழ்.மனிதமுன்னேற்ற நடுநிலையத்தின் ஊடாக பல செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு போரின் விளைவால் வாழவழியின்றித் தவிக்கும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி வலுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் உதவிகளை சிறந்தமுறையில் பயன்படுத்தி கூட்டுறவுடனும் நேர்மையுடனும் உழைப்பது எமது எல்லோரதும் சேவையாகவும் கடமையாகவும் உள்ளது எனத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான்வீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 2000ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 187

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகவொளி" நிலையம்
## குடும்ப தின விழாவை முன்னிட்டு நடாத்தும் போட்டிகள்

பிரிவு : I 6ம் ஆண்டு முதல் 9ம் ஆண்டு வரை.
பிரிவு : II 10ம் ஆண்டு முதல் 12ம் ஆண்டு வரை.
பிரிவு : III 13ம் ஆண்டும் 20 வயதுக்குட்பட்டவர்களும்.
பிரிவு : IV 20 வயதிற்கு மேற்பட்டோர் அல்லது வளர்ந்தோர்.

**பிரிவு : I** ✱ கவிதை - "குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்" (20 வரிகள்)
✱ கட்டுரை- "குடும்பத்தில் முதியோரின் பங்களிப்பு" (350 சொற்கள்)
✱ பேச்சு - "வீட்டில் நிலவும் சமயச் சூழ்நிலை பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்யுமா?" (7 நிமிடம்)

**பிரிவு : II** ✱ கவிதை - "குடும்பம் ஒரு இல்லத் திருச்சபை" (25 வரிகள்)
✱ கட்டுரை - "விழுமியம் காக்கும் குடும்பம், சமூகத்தைக் காக்கும்" (600 சொற்கள்)
✱ பேச்சு - "மெய்யான ஆன்மீகத்தின் அடித்தளம் மனிதத்தைப் பேணுதலே" (10 நிமிடம்)

**பிரிவு : III** ✱ கவிதை ~ "பாகுபாடற்ற சகோதரத்துவ சமூகம்" (30 வரிகள்)
✱ கட்டுரை ~ "சமகால நிகழ்வுகளின் மத்தியில் குடும்ப விழுமியங்கள் பேணப்படுதல் முடியுமா?" (750 சொற்கள்)
✱ பேச்சு ~ "விஞ்ஞானம் ஆன்மீகத்தை ஊக்குவிக்குமா?" (10 நிமிடம்)

**பிரிவு : IV * கவிதை, கட்டுரை, கதை, விமரிசனங்கள், சித்திரங்கள், கேள்வி - பதில்கள் இன்னும் இனைத்தும் குடும்ப சம்பந்தமான கருப்பொருட்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.**

**இப் போட்டிகளுக்கான விதிகளும், குறிப்புக்களும் :**

1. கவிதை, கட்டுரை, பேச்சு போட்டி போன்ற அனைத்தும் போட்டிகளிலும் வேதாகம வார்த்தைகளுக்கும், சிந்தனைகளுக்கும் முன்னுரிமை கொடுப்பது வரவேற்கத்தக்கது.
2. கவிதை, மரபுக் கவிதைகளாகவோ புதுக்கவிதைகளாகவோ அமையலாம்.
3. தகுதியானவற்றிற்கு பரிசில்கள் வழங்கப்படும்.
4. போட்டியாளர்கள் ஒவ்வொருவரும் தமது பெயர், வயது, விலாசம், பாடசாலை, பங்கு மதலிய தகவல்களையும் தமது ஆக்கங்களுடன் தரவும் வேண்டப்படுகின்றனர்.
5. போட்டியில் பங்குபற்றுவோர் தமது ஆக்கங்களை நேரடியாகவோ அல்லது அந்தந்த பங்குகளைச் சேர்ந்த கிறீஸ்தவ குடும்ப இயக்கம் மூலமாகவோ அனுப்பலாம்.
6. ஒருவர் ஒன்றில் மாத்திரமல்ல பலவற்றிலும் பங்குகொள்ளலாம்.
7. ஆக்கங்கள் பங்குத்தந்தையரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
8. ஆக்கங்கள் **புரட்டாதி மாதம் 30ஆம** திகதிக்கு முன்னர் **காரியதரிசி, கிறீஸ்தவ குடும்ப இயக்கம், அகவொளி, 131 பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம** என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
9. சகல போட்டிகளிலும் "அகவொளி" நிலையத்தின் தீர்ப்பே இறுதியானது.
10. பேச்சுப் போட்டியிலும் பங்குபற்ற விரும்புவோர் தமது பெயர், மற்றைய விபரங்களை 20.09.00ற்கு முன் அகவொளிக்கு அறியத்தரல் வேண்டும். பேச்சுப் போட்டிக்கான காலம், நேரம் என்பன பின்னர் அறிவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு "அகவொளி" தொலைபேசி இல. 2856, கிறீஸ்தவ குடும்ப இயக்கம், பங்குத்தந்தை முதலியவர்களை நாடலாம்.

**இயக்குநர்,**
**"அகவொளி"**

# சமயப் பெரியார்களுக்கு ஓர் அவசர வேண்டுகோள்

சமயப் பேரவையின் இணைப்புக் குழு அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் பௌத்த, கத்தோலிக்க, கிறீஸ்தவ, இந்து, இஸ்லாமிய பெரியோர்களுக்கு பின்வரும் அவசரமான வேண்டுகோளை சமர்ப்பித்துள்ளது.

இனக் கலவரத்தால் ஏற்படுகின்ற இறப்பு, இழப்பு, சொல்லொணாத்துயரம் ஆகியவற்றை அறிந்தும் யாழ். குடாநாட்டு யுத்த நெருக்கடியினால் ஏற்படக் கூடிய இரத்த வெள்ளத்தை முன் உணர்ந்தும் அநீதி, கொடுமை,வன்முறைகளிலிருந்து மக்களைப் பேணிப் பாதுகாக்கும் சமயப் பெரியார்களின் செயற்பாடுகளை ஏற்றுக்கொண்டும் பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

**1. தேசிய நலனைக் கருதி அரசாங்கமும், எதிர்க்கட்சியும் பேச்சுவார்த்தைகளில் அநாவசியமானவற்றை நிராகரித்து இன்றைய பயங்கர நிலைமையை சீர்படுத்தக் கூடியவற்றை மாத்திரம் அலசி ஆராய்ந்து முடிவுக்கு வர ஊக்குவிப்பது.**

**2. அறிவு, ஆற்றல், அனுபவம் நிறைந்த சமய, சமூகப் பெரியோர்களை நாடி தீர்வு காண்பது. இவர்களை ஆற்றல்மிக்க "தகவல் குழு"வாக இயங்வைப்பது.**

**3. யாழ். குடாநாட்டில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் கடுஞ்சமர் நிலவி வர அப்பாவி மக்களின் துரதிர்ஷ்ட நிலைமைய அறிந்து இனக்கலவரத்தை தாமதமின்றி தீர்த்து வைப்பதற்கு இந்தியாவின் அரசியல் பங்களிப்பை வேண்டு வதுமாகும். இந்தியாதான் எமது நாட்டுக்கு ஒற்றுமையையும், சமாதானத்தையும் கொண்டுவர முடியும். அத்தோடு அதன் அரசியல் செல்வாக்கு தென் ஆசியாவில் தெளிவானதாகும்.**

மேற்படி அறிக்கையில் வண. பேராசிரியர் பெல்லன்வில விமலரத்னநாயக்க தேரோ, அருள்திரு கலாநிதி மேர்வின் பெர்னாண்டோ, வண. மதுலுவெல சோவித்த நாயக்க தேரோ, திருமதி சிவானந்தினி துரைசாமி, அருள்திரு றோய் ருபேரா, திரு ஜாவிட் யூசுப் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

# நற்கருணை பேரணி - பதுளை மாவட்டம்

"ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்து பாருங்கள்" வேண்டிய மட்டும் எம் காதுகளில் இவை ஒலிக்கட்டும்.

இந்த ஒலி காதுகளில் மட்டுமல்ல உள்ளத்திலும் ஆழமாக ஒலிக்க பதுளை மறைமாவட்ட இறைமக்கள் ஆகஸ்ட் 6ம் திகதி பதுளை பேராலயத்திற்கு அழைக்கப்பட்டனர்.

வார்த்தை மனுவுருவாகி நம் மத்தியில் வாழ்ந்த நிகழ்வின் 2000 வருடங்கள் நிறைவு பெற்றுள்ளது. புதிய மூன்றாவது மிலேனியத்தில் பிரவேசித்துள்ள எல்லா கிறிஸ்தவர்களும், இறைவனின் இம் மனித அவதாரத்தின் மறை பொருளை காலத்தின் அறிகுறிகளுடன் ஒத்து சிந்திக்க அழைக்கப்படுகின்றனர். இம் மறைபொருளை தெளிவாக விளங்கிக் கொள்ள உதவுவது நற்கருணையே. எனவே, திருச்சபை 2000ம் ஆண்டின் தலைவாயிலைக் கடந்துள்ள இந்த கால கட்டத்தில், நாம் மனுவுருவான வார்த்தையின் சந்நிதானத்தில் பிரவேசிப்போம். அங்கு அவர் நம் ஒவ்வொருவருக்கும் விடுக்கும் அன்பு வேண்டுகோளுக்கு செவிமடுப்போம்.

கிறிஸ்துவின் பிரசன்னத்தை அவரின் அர்ப்பண வாழ்வை, அவரின் வார்த்தைகளை வாழ்வது தான் உண்மையில் நற்கருணை வாழ்க்கை. எனவே நடைபெற்ற நற்கருணை பேரணி மூலம் இவற்றை சுவைக்க முயல்வோம். அப்போது தான் பிறந்த ஜூபிலி ஆண்டு அருள் தரும் ஆண்டாக, மனித விடுதலையின் ஆண்டாக நம் எல்லோருக்கும் அமையும்.

எனவே இவ் விழாவை அர்த்தமுள்ள வகையில் கொண்டாடி, கிறிஸ்துவை குடும்பத்திலும் சமூகத்திலும் வாழ அனுமதிப்போம்.

பாதுகாவலன் பணிமனையில்

# எம்மிடம் விற்பனைக்கு உள்ளவை

| | | |
|---|---|---|
| சிறுவர் செபத்துணை | – | 20.00 |
| சுருக்கமான சிலுவைப் பாதை | – | 5.00 |
| கல்லறைச் செபம் | – | 5.00 |
| இறை இரக்கம் | – | 15.00 |
| குழந்தை யேசு பக்திமாலை | – | 8.00 |
| ஆரோக்கியமாதா பக்திமாலை | – | 15.00 |
| சதாசகாய மாதா பக்திமாலை | – | 15.00 |
| புனித அந்தோனியார் பக்திமாலை | – | 12.00 |
| திருமணித்தியாலம் | – | 12.00 |
| மோட்சபாதை | – | 125.00 |
| வியாகுல பிரசங்கம் | – | 35.00 |
| நடுத்தீர்வை உலா | – | 10.00 |
| இயேசுவின் துறவி | – | 5.00 |
| திருக்குறளும் விவிலியமும் I | – | 15.00 |
| திருக்குறளும் விவிலியமும் II | – | 15.00 |
| சொல்லு கள்ளத் தோணியா (யோசவ்வாஸ் முனிவரின் நாடகம்) | – | 10.00 |
| இலங்கை அப்போஸ்தலர் முத்திப் பேறுபெற்ற யோசவ்வாஸ் | – | 15.00 |
| திருமறைச் சுடர் | – | 10.00 |
| பொதுநிலையினரின் முதிர்ச்சி | – | 5.00 |
| நற்கருணை அப்போஸ்தலர் புனித யூலியன் எய்மாட் | – | 15.00 |
| அற்புத வரவணிக்கத்தின் எங்கள் நாயகி | – | 2.00 |
| புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகம் விளக்கவுரை | – | 50.00 |
| வாழ்த்து மடல் (நன்றி) | – | 5.00 |
| வாழ்த்து மடல் (பலதரப்பட்டவர்க்கும் அனுப்பக் கூடியது) | – | 10.00 |
| பிறந்தநாள் வாழ்த்து மடல் (நண்பர்களுக்கு மட்டும் அனுப்பக் கூடியது) | – | 10.00 |
| வரவணிக்கங்கள் ஸ்ரிக்கர் (மடுமாதா, வேளாங்கண்ணி மாதா, குழந்தை யேசு) | – | |
| மரண நினைவஞ்சலி படங்கள் | – | 2.00 |
| முதல் நன்மை ஞாபகப் படங்கள் | – | 1.00 |
| புனிதர்களின் படங்கள் | – | 1.00 |

# பாதுகாவலன் 125ஆவது ஆண்டு மலர் அட்டைப்படப் போட்டி

உங்கள் பாதுகாவலனின் வயது 125 என்பதனை யாவரும் அறிந்ததே! அதையொட்டி மலர் ஒன்று வெளிவரவுள்ளது. எனவே பாதுகாவலன் வாசக நெஞ்சங்களே உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம். பாதுகாவலன் மலர் வெளியீட்டிற்கான அட்டைப் படத்தினை உங்களிடமிருந்து எதிர் பார்க்கிறோம்.

போட்டி விதிகள்.

1. 14cm அகலமும் 20cm உயரமும் கொண்ட மொத்தமான வெள்ளைத் தாளில் கறுப்பு மையால் (இந்தியன் மை) கீறப்பட வேண்டும். இன்னொரு தாளில் நிற அமைப்புகள் குறிக்கப்படலாம்.
2. 2000ஆம் ஆண்டு யூபிலி ஆண்டு தொலைத் தொடர்பு சாதன வளர்ச்சி, இறைமனித உறவு, மண்ணின் சோக நிகழ்வுகள், முழுமனித விடுதலை, மனித மாண்பு, தமிழரின் சமய, சமூக, கலை, கலாசார, பண்பாடு என்பவற்றில் பாதுகாவலனின் பணியும் பங்களிப்பும் என்பதையொட்டி குறியீட்டு முறையில் அமையலாம்.
3. **ஐப்பசி மாதம் 15ஆம் திகதி 2000** ஆண்டுக்கு முன் கிடைக்கக்கூடியதாக **ஆசிரியர், பாதுகாவலன் பணிமனை, 360, பிரதான வீதி, யாழ்ப்பா ணம** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
4. சொந்த ஆக்கம் என விண்ணப்பதாரி வதியும் பிரதேச பங்குத் தந்தையினால் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.
5. மூவர் கொண்ட குழுவினரால் தெரிவு செய்யப்படும். பிரசுரத்திற்கு தெரிவுசெய்யப்படும் படத்திற்கு முதற்பரிசாக 2000/=வும் சான்றிதழும் வழங்கப்படும். தரமான முதல் 12 படைப்புகள் மலரின் உட்பகுதியில் பிரசுரிக்கப் பட்டு சான்றிதழ் வழங்கப்படும். **நடுவர் குழுவினரது தீர்ப்பே இறுதியாகும்.**
6. வயதுக் கட்டுப்பாடு இல்லை. யாவரும் பங்குபற்றலாம்.

மேலதிக தகவல் தேவைப்படின் பாதுகாவலன் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழுவின் வளர்ச்சிப் போக்குகளும், பணியின் பரிமாணங்களும்

Sr. நெவிஸ் லடிஸ்லாஸ் H.F

**உறவில் முகிழ்வது வாழ்வு. வாழ்வு ஒரு தேடல். இத் தேடலுக்கு முழுமையான பதில்களும், முற்றுப்புள்ளிகளும் கிடையாது.** சமூகமாகப் படைக்கப்பட்ட மனிதனின் இயல்பே தேடிச் செல்வதாகும். தேடுவதில் தொடங்கும் உறவு, பல்வேறுவிதமான தொடர்புகளை அவனுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. இதை உணர்ந்தோ என்னவோ ஓர் கவிஞன்.

சந்திப்பு நிகழ்வது கண்டு - பலர் சந்திக்கும் இடங்களும் உண்டு.
சொந்தங்களாவது உண்டு - அது தொடர்கதையாவது உண்டு
இறைவனும் மனிதனும் பயணம் செய்தாலோ யாரை யார் வெல்லுவாரோ?

என்று தேடல்களின் உறவுத் தொடர்புகளின் வளர்ச்சிப் படிநிலைகளை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

**மனிதனின் தேடுதல்கள் அனைத்தும் ஈற்றில் இறைவனைத் தேடுவதிலேயே முற்றுப்பெறும். இந்த இறைத்தேடலுக்கு உதவிசெய்ய அமைக்கப்பட்ட ஓர் சமூகத் தொடர்பு ஆணைக்குழு ஆகும்.**

## கால்கோள்

யாழ். மறைமாவட்டத்தைப் பொறுத்தளவில் 1973 தொடக்கம், இது சமூகத் தொடர்புசாதனப் பணி சர்வதேச ரீதியாகவும் இலங்கையிலும் செயற்பட்டு வரும் முக்கிய மூன்று நிறுவனங்களான UNDA, OCIC, UCIP இவற்றின் ஆதரவில் இயங்கத் தொடங்கின. வானொலி, தொலைக்காட்சிக்கு - UNDA, திரைப்படத் துறைக்கு - OCIC, பதிப்புகளுக்கு - UCIP ஆகியவை தங்கள் பங்களிப்பை வழங்குவதில் கணிசமான ஒத்துழைப்பை நல்கின.

## தொடக்ககாலப் பணிகள்

1984க்குமுன் வானொலி, திரைப்படத்துறை ஆயரினால் நியமிக்கப்பட்ட இயக்குநராலும், பதிப்பகப் பணியானது இலங்கைத் தமிழ் மக்களின் ஒரேயொரு கத்தோலிக்க வார இதழான பாதுகாவலனின் ஆசிரியர்களாகப் பணியாற்றிய குருக்களாலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. பல்வேறு காலங்களில் ஆங்காங்கே இடம்பெற்ற மகாநாடுகள், கருத்தரங்குகளில் பொறுப்பானவர்கள் பங்குகொண்டு பல புதியனவற்றைக் கற்றனர். 1985வரை யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றிய குருக்கள், துறவியர், பொதுநிலையினர், பாடசாலை மாணவ மாணவியர்களால் தயாரிக்கப்பட்ட பலதரமான கத்தோலிக்க நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இரு வாரத்துக்கொரு முறை ஒலிபரப்பப்பட்டு பலருடைய பாராட்டுதல்களைப் பராட்டுதல்களைப்பெற்றது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் 5நிமிட கத்தோலிக்க நற்சிந்தனையும், ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் 112நிமிட வளர்ந்தோர் நிகழ்ச்சிகளும் கிறீஸ்மஸ் விழா, உயிர்ப்புவிழா போன்ற விசேட நாட்களில் பல்வேறு விதமான பாடல்கள், நாடகங்கள், உரைச்சித்திரங்கள் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மறைமாவட்டத்தின் பங்குகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் பற்றிய கருத்தரங்குகளும், திரைப்படங்கள் பற்றிய திறனாய்வுப் பட்டறைகளும் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டன. 1983இல் வெடித்த இனப்பிரச்சினையால் வானொலிக் கலைஞர்கள் கொழும்புக்குச் செல்வதும், யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்ட கலைஞர்களின் ஆர்வங்களை தணித்துக் கொண்டது.

ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ்ப்பாணத்தில் ஓர் சிறிய ஒலியகத்தை அமைக்க உற்சாகமளித்ததன் பயனாக, 1980இல் இந்த ஒலியகம் புனித பத்திரிசியார் கல்லூரியின் மேல்மாடியில் இயங்கத் தொடங்கியது. சில கத்தோலிக்க பாடல்களின் ஒலிப்பதிவு நாடாக்கள் வெளிவந்ததோடு அநேக கத்தோலிக்கரின் வேண்டுகோளுக்கிணங்க இவ் ஒலிப்பதிவு நாடாக்கள் மீள்பதிவு செய்யப்பட்டு மறைமாவட்டத்தில் விநியோகிக்கப்பட்டது. "பலிக்களம்" போன்ற கத்தோலிக்க நாடகங்களுக்கான ஒலிவரிகள்பதிவு செய்யப்பட்டன. மறைமாவட்டத்தின் ஏனைய நிறுவனங்களும் தத்தம் தேவைகளுக்கேற்ப இந்த ஒலியகத்தைப் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

## இருள் சூழ்ந்த காலம்

**துரதிர்ஷ்டவசமாக 1980 களின் பிற்பகுதியில் நாட்டின் யுத்த நிலைமை கட்டவிழ்த்துவிடப்பட்ட அக் காலத்தில், விலையுயர்ந்த ஒலிப்பதிவுக் கருவிகளை பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டனாலும், மின்சார வசதிகள் துண்டிக்கப்பட்டதனாலும், ஒலியகம் அமைந்திருந்த கட்டடத்திற்கு அண்மையில் ஏற்பட்ட பாரிய குண்டு வெடிப்பினாலும், நுட்பமான கருவிகள் செயலற்றுப் போயின.**

எமது தொடர்புசாதனங்களும், அவற்றின் பணிகளும் கொழும்பு வானொலி, தொலைக்காட்சி நிலையங்களோடு இணைக்கப்பட்டிருந்தன. மேற்கூறப்பட்ட துரதிர்ஷ்டவசமான இழப்புகளால் நாடகப் பிரதி எழுதுதல், வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் பற்றிய சில கருத்தரங்குகள், பட்டறைகளைத் தவிர காலத்துக்குக் காலம் திட்டமிடப்பட்ட அனைத்துப் பணிகளும் செயலிழந்து நின்றன.

## காலம் காட்டிய கோலங்கள்

**காலத்துக்கு காலம் திருத்தந்தை அவர்கள் உலகத் தொடர்புசாதனத் தினத்தை யொட்டி வழங்கிய செய்திகள், உலக சமூகத் தொடர்புசாதனங்களின் துரித வளர்ச்சிப் போக்குகள், நடப்பியல் அறிவியல் வேகங்கள் சமூகத்தில் ஏற்படுத்துகின்ற பாரிய மாற்றங்கள், உலகில் நிமிடத்துக்கு நிமிடம் வெளிவரும் புதிய பதிப்புப் பிரதிகளின் எண்ணிக்கைகள், வானொலி, தொலைக்காட்சி, கணனி ஆகியவற்றின் பல்வேறு பணிகளின் உச்சநிலைகள் ஆயரின் ஊக்குவிப்புக்கள், மேய்ப்புப் பணி மாநாடுகள் மறைமாவட்ட குருக்கள், துறவியர், எழுத்தாளர்கள் இலக்கிய வித்தகர்களின் எதிர்பார்ப்புகள். விழிப்புகள் இச் சமூகத்தொடர்பு ஆணைக் குழுவினரை செயற்பட உந்தித் தள்ளியது.** அதன் பயனாக புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு இக் குழு மீண்டும் அசையத் தொடங்கியது. காலத்துக்குக் காலம் ஆயரினால் நியமிக்கப்பட்ட அருள்தந்தையர்கள் மைக்கல் ஜோசவ், அன்ரன் மத்தாயஸ், ரூபன் மரியாம்பிள்ளை போன்றவர்களின் தலைமையில் இவ் ஆணைக்குழு செயற்படுத்த தொடங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது.

## பூஜ்ஜியத்தில் இராச்சியம் அமைக்கும் மாமேதைகள்

தமிழ் மக்கள் என்றும் ஊக்கமுள்ளவர்கள். வெட்ட வெட்டத் தழைப்பவர்கள். ஒன்றுமற்ற நிலைகளிலும் நம்பிக்கை இழக்காதவர்கள். போர் உக்கிரம் அடைந்து யுத்தப் பிரகடனம் அமுலில் இருக்கம் காலகட்டங்களிலும் சரி, போர்ச் சூழலே இறுதி போர்க்கப்பட்ட பேரவையாக இருந்த காலத்திலும் சரி, இச் சமூகத் தொடர்பு ஆணைக்குழுவினர், நம்பிக்கை என்ற கால்களை யாழ்மண்ணில் ஆழப் பதித்துக்கொண்டு பின்வரும் பணிகளை செய்துவருகின்றனர்.

**1. வானொலியில் நற்சிந்தனை வழங்கல்.**

**2. உதயன், பாதுகாவலன், தினக்குரல் போன்ற புதினத் தாள்களுக்கு செய்திகளை வழங்க எழுத்தாளர்களை ஊக்குவித்தல்.**

**3. பங்குத் திருச்சபையின் உதவியுடன் சில நாடகங்களைத் தயாரித்து, ஒலிப்திவு செய்து இலங்கை வானொலியிலும், யாழ். சேவையிலும், வானம் பாடியிலும் ஒலிபரப்புதல்.**

**4. கத்தோலிக்க பாடல்கள், திருப்பாடல்கள் இவற்றுக்கு இசையமைத்து ஒலிப்பதிவு செய்து காலத்துக்குக் காலம் வெளியீடுதல்.**

**5. எழுத்தாளர்களை ஊக்குவிக்க பயிற்சிப் பட்டறைகளை நிகழ்த்துதல்.**

**6. Audio, Video பயிற்சி அளித்தல். புதிய ஒலிப்திவு நாடாக்களை தமிழ் நாட்டிலிருந்து பெற்று வழங்குதல்.**

**7. ஒலியகப் பணிகளுக்கு தேவையான புதிய கருவிகளை வாங்குதல்.**

**8. திருவழிபாட்டு காலச் சக்கரங்களில் இழையோடும் இறையியல் கருத்துக்களை, கத்தோலிக்க மக்களுக்கு, கத்தோலிக்க வெளியீடுகளின் வழியாகவும் ஏனைய புதினத் தாள்களின் வழியாகவும் பரப்புதல்.**

**9. பதிப்பகத்தை ஏனைய உலக பதிப்பகங்களின் நிலைக்கு இன்னும் தரமுயர்த்தத் தூண்டுதல்.**

**10. பொருத்தமான வள ஆளணியினரை அழைத்து அறிவு பெறுதலும், பணிகளை காலத்துக்குக் காலம் திறனாய்வு செய்தல் போன்றவைகளே அவைகள் ஆகும்.**

## பாதுகாவலன் பற்றிய பார்வை

யாழ். மறைமாவட்டம் வெளியிடும் ஒரேயொரு தமிழ் கத்தோலிக்க வார இதழ் பாதுகாவலன். விளம்பரங்களால் மலிந்துபோன இப் புது மிலேனியத்தில் விளம்பர வெளிச்சத்திலிருந்து விலகி, இறையரசையும், அதன் விழுமியங்களையும் மனித மனங்களில் விதைத்து, வளர்த்து, புதுப்பிக்கும் ஓர் உந்துசக்தியாகி தன் நோக்கை 125 ஆண்டுகளாக நிறைவுசெய்யும் இவ் இதழுக்கு, ஈழத் தமிழ் பேசும் கத்தோலிக்க மக்கள் மாத்திரமல்ல, உலகெங்கும் பரவிவாழும் கத்தோலிக்க மக்கள் அனைவரும் இதயம் என்ற வெள்ளித்தட்டில் நன்றியென்ற மலர்ப் பூங்கொத்தை ஏந்தி மோகனப் புன்னகையுடன் நன்றி கூறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

இவ் வார இதழ் பல உளவியல் ரீதியான, விவிலிய சம்பந்தமான செய்திகளுடன் சிறுவர், இளைஞர், வளர்ந்தோர், குடும்பங்கள் ஆகிய அனைவருக்கும் ஏற்ற செய்திகளையும் தாங்கி வெளிவருவது பாராட்டத்தக்கது.

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க மக்களுக்கு மாத்திரமல்ல, மன்னார், மட்டக்களப்பு, மலையகம் வாழ் கத்தோலிக்க மக்களுக்கும் நற்செய்தியையும் அதன் விழுமியங்களையும் எடுத்துச் சொல்கின்றது.

தமிழ் மக்கள் தொடர்ச்சியான போரின் கொடுமையால் நலியும் வேளையில் கூட நிமிர்ந்து நின்று, தன் பணியைத் திறம்பட ஆற்றும் பணியாளர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் உயர்ந்த இடத்தில் வைத்து மானசீகமாக மதிக்கப்பட வேண்டியவர்கள்.

நவீனமயப்படுத்தப்பட்ட ஓவ்செற் அச்சு இயந்திரங்கள், கணனிகளின் உதவியுடன் இவ்விதழ் இலகு தமிழில் இதயம் கவரும் செய்திகளை அதிவேகமாகப் பரிமாற்றம் செய்வது போற்றத்தக்கது.

அறிவியலில், தொடர்புசாதனங்களின் உலகியல் தொழில்நுட்ப வளர்ச்சியோடு ஒப்பிட்டு நோக்கும்போது "யானைப் பசிக்கு சோளம் பொரி போடுவதாக" இதன் முயற்சிகள் அமைந்தாலும், 125ஆவது அகவைக் காணும் காவலன் என்ற நங்கைக்கு, புகழ் என்ற பொன்னாடை போர்த்துவதும், நன்றி நகைகள் அணிவதும், மிகப் பொருத்தமானதே.

எனினும் தரமேம்பாடு செய்வதற்கும், எழுத்தாளர்களிடமிருந்து தரமான ஆக்கங்களைப் பெறுவதற்கும், திறனாய்வு நோக்குடன் அகப்பார்வையின் மூலம் புதியன காண்பதற்கும், எழுத்தாளர்களை விசைப்படுத்துவதற்கும், இச்சமூகத் தொடர்பு ஆணைக்குழுவுக்கு இன்னும் பாரிய பொறுப்புண்டு, என்பதையும் மறுக்கமுடியாது. **பொதுநிலையினரின் பொற்காலமென்று புகழாரம் செலுத்தி பொதுநிலையினரை ஊக்குவிக்கும் குருக்கள், துறவியர்களில் பலர் இக் கத்தோலிக்க வார இதழுக்கு ஆக்கங்களை அளிப்பதில் சோர்வுற்று இருப்பது வேதனைக்குரியது.** "ஒரு கைதட்டி ஓசைவராது" என்பதற்கொப்ப பொதுநிலையினருடன் குருகுலத்தோரும், துறவறத்தோரும் ஆக்கங்களை வழங்குவதற்கு வழித்தெழுவது விரும்பத்தக்கது. அறை கூவல்கள் எவ்வழியில் வந்தாலும் வாழும் திருச்சபையாக அஃது இருப்பின் தனித்துநின்று தன்நிலையை ஒளிவுமறைவு இன்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும். பார்ப்பதோடு மட்டும் நின்றவிடாது காலத்துக்கொவ்வாத தனது போக்குகளை மாற்றவும் துணியவேண்டும். அப்படி மாறாவிடில் அது வாழும் வளமான இயக்காற்றல் வாய்ந்த திருச்சபையாக இருக்கமுடியாது. குருக்கள், துறவிகளாகிய நாம் எமக்குப் பின்னால் தேடிவைத்திருக்கும் பட்டங்களுக்கு ஏற்ப அதிலும் மேலாக அவனவனுக்கு ஆவி அளித்த கொடைகளை இறை மக்களுடன் பகிருவது மிக அவசியமானது. இக் கத்தோலிக்க வார இதழுக்கு தொடர்ச்சியாக ஆக்கங்களை அளிக்கும் பங்குத் திருச்சபையினரும், சில தனி நபர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். புகழாரம் சூட்டப்பட வேண்டியவர்கள்.

## நிறைவாக

மனிதனது தேடலில் தொடர்புசாதனங்கள் துணைபுரிய வேண்டுமேயொழிய தடையாக இருக்கக் கூடாது என்று எம் திருத்தந்தை 33வது உலகத் தொடர்பு சாதனங்கள் தினத்தையொட்டிய செய்தியில் அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார். இறைவனைத் தேடுவதிலேயே முற்றுப்பெறும் மனித தேடல்களுக்கு ஊடகமாகப் பயன்படும் தொடர்புசாதனங்கள் ஒவ்வொன்றும், உண்மையை அறியவேண்டுமென்ற ஆவலில் கால்ஊன்றி மனிதவாழ்வு, மனிதமாண்பு, சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம், பகிர்தல், நீதி ஆகியவற்றக்கு சான்றுபகர்வதில் உள்ள பொறுப்பை காத்திரமாக உணர்ந்து செயற்படவேண்டும்.

அணுசக்தியை விட பன்மடங்கு சக்திவாய்ந்த தொடர்புசாதனங்களின் சக்தியானது ஆக்கும் அன்பும் சக்தியாக இருந்து, செய்திகளோடு நினைவூட்டலையும், தகவல்களோடு ஞானத்தினையும், பொழுதுபோக்குகளுடன் மகிழ்ச்சியையும் அளித்து, மக்களுக்கு உற்றதுணையாக இருப்பது அவசியமாகும்.

ஒட்டுமொத்தமாக உய்த்துணரும் போது, தேடல்களின் கருவியாக உள்ள மனிதன், மனிதத்தை தன்னுள் வளர்க்கவும், மனித நேயத்தை அன்புப் பிரவாகமாக்கி இப் பிரபஞ்சத்தில் வழிந்தோடச் செய்யவும், அதன் பயனாக இறைவனைத் தேடி அவனுடன் சங்கமமாகவும், தொடர்புசாதனங்களை உச்சஎல்லையில் பயன்படுத்தும் போதே அது தன்நோக்கை அடையும் என்பது என் கருத்து. அதற்கு என்றும் இறைமக்களுக்கு வழிகாட்ட வேண்டியது, சமூகத்தொடர்பு ஆணைக்குழுவின் தலையாய கடமையாகும்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முக்கிய விடயம் பத்திமா மாதாவின் மூன்றாவது இரகசியம்

## "எனது குறி ஒருபோதும் தப்பாது நீங்கள் தப்பியது எப்படி?" - அலி அகா

## "துப்பாக்கியை இயக்கியது ஒருகை, சன்னத்தை வழிநடத்தியது வேறொரு கை" - திருத்தந்தை

# திருத்தந்தையைப் பாதுகாத்த பத்திமா அன்னை





1981ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.19மணிக்கு வத்திக்கான் புனித பேதுருவானவர் சதுக்கத்தில் எடுக்கப்பட்ட படம். சுவிற்சலாந்தைச் சேர்ந்த மாணவனான கிறிஸ்தோபர் கியூம் எதிர்பாராமல் எடுத்த இப்படம் திருத்தந்தை சுடப்படுவதற்கு சில வினாடிகளுக்கு முன்னர் எடுக்கபட்டதாகும். கொலைஞன் துப்பாக்கியை உயர்த்தி திருத்தந்தையை சுட ஆயத்தமாகிவிட்டதைப் படத்தில் காணலாம்.

**1981 மே 13 கத்தோலிக்க உலகையே உலுக்கிய நாள்.**

**கொடிய செயல்கள் மலிந்த 20ஆம் நூற்றாண்டின் கடைசிக் கட்டத்தில்தான் உலகில் கிறீஸ்துவின் பிரதிநிதியாகிய திருத்தந்தையையே கொல்ல முயன்ற திடுக்கிடும் செயல் இடம்பெற்றது.**

பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் அவர் அன்று சமூகமளித்திருந்தார். மக்கள் இன்னும் தம்மை அண்மையில் தரிசிக்க, தம்மோடு இன்னும் நெருக்கமாக உறவுகொள்ள வாய்ப்பளிக்கும் வகையில் அவர் மக்கட் கூட்டத்தின் நடுவே சென்றுகொண்டிருந்தபோதே எதிர்பாராதவிதமாக அவர் ஒரு கொலைஞனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார். **சுடப்பட்ட 9கலிபர் துப்பாக்கிச் சன்னங்களில் ஒன்று அவரது இடக்கையைக் காயப்படுத்தியது. மற்றொன்று அவரது உடலைத் துளைத்து பின் வெளியேறி அவரது வாகனத்தினுள் விழுந்தது.** கொலைகாரன் 23 வயதான அலி அகா என்னும் இளைஞன் என்று பின்னர் இனங்காணப்பட்டது. சுமார் 6 மீற்றர் தூரத்திலிருந்து இருமுறை சுட்ட அலி அகாவின் நோக்கம் திருத்தந்தையைக் கொல்வதே என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

உடனடியாக சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட திருத்தந்தையின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. அவரது இரத்த அழுத்தம் வீழ்ச்சியுற்று, நாடித்துடிப்பு தளர்ந்து போயிற்று. **திருத்தந்தையின் செயலாளரான அருள் தந்தை ஸ்ரனிஸ்லாவ் ஸீவிற்ஸ் அவருக்கு இறுதி அருட்சாதனங்களை அளித்தார்.**

சத்திரசிகிச்சையின் போது அவரது உடலிலிருந்து பெருமளவு இரத்தம் வெளியேறியது. உட்காயங்களால் தமது இரத்தத்தில் 60வீதத்தை இழந்துவிட்டிருந்தார். 5மணி 20நிமிடம் நீடித்த சத்திரசிகிச்சையின் போது சிதைவுற்றிருந்த அவரது குடலில் 1/2 மீற்றரை அகற்ற வேண்டியிருந்தது. **குண்டினால் ஏற்பட்ட சிதைவுகளை சீர்படுத்துவதில் ஈடுபட்டிருந்த வைத்தியர்களுக்கு குண்டு சென்றிருந்த வழி ஆச்சரியத்தைக் கொடுத்தது. அங்கு ஒரு "புதுமை" நிகழ்ந்திருப்பதாக அவர்கள் உணர்ந்தனர்.** முக்கிய உறுப்புக்களையெல்லாம் விலக்கத்தக்க விதமாக யாரோ அக் குண்டை செலுத்தியிருப்பது போல் தோன்றியது. அவரது பெருநாடியும் முள்ளந்தண்டும் மயிரிழையில் தப்பியிருந்தன. இதன் காரணமாக அவர் உயிர்காக்கப்பட்டது மட்டுமின்றி, அவரது உடலில் நிரந்தரமான எப்பாதிப்பும் ஏற்படவில்லை.

**திருத்தந்தை பின்னர் கூறியது போல் "துப்பாக்கியை இயக்கியது ஒரு கை. சன்னத்தை வழிநடத்தியது வேறொரு கை".**

பத்திமா அன்னையின் மூன்றாவது இரகசியத்தை ஏற்கனவே படித்திருந்த திருத்தந்தைக்கு அதிற் கூறப்பட்ட "வெண்ணாடை அணிந்த ஆயர்" தாமே என்று தோன்றியருக்க வேண்டும். பத்திமா அன்னையின் கரமே அன்று தன் உயிரைக் காத்தது என்று அவர் உறுதியாக நம்பினார்.

குற்றவாளி அலி அகா உடனடியாகக் கைதுசெய்யப்பட்டான். அவன் தானாகவே இக் காரியத்தைசெய்யவில்லைஎன்பது வெளிப்படலாயிற்று. அவனை இயக்கியது யார்? இத்தாலிய குற்றவியல் நிபுணர்களும், எத்தனையோ நாடுகளின் புலனாய்வு ஸ்தாபனங்களும் இதைக் கண்டுபிடிக்க முனைந்தன. திருத்தந்தையோ இந்த ஆய்வுகளிலோ விசாரணைகளிலோ அக்கறை காட்டவில்லை.

கொலை முயற்சி நடந்த 4 நாட்களின் பின் தாம் சிகிச்சைபெற்ற வைத்தியசாலையிலிருந்து ஒலிபெருக்கி மூலம் வைத்தியசாலைக்கு முன் கூடியிருந்த மக்களோடு தொடர்புகொண்டார். **"என்னைச் சுட்டவனுக்காக மன்றாடுகிறேன். அவன் எனது சகோதரன். உண்மையில் அவனை மன்னிக்கிறேன்", என்று அவர் அவ் வேளையில் கூறினார்.**

டிசம்பர் 1983இல் திருத்தந்தை சிறைச்சாலையை தரிசித்து 2 1/2 ஆண்டுகளுக்கு முன் தம்மைக் கொல்ல முயற்சித்தவனைச் சந்தித்தார். அவரைக் கண்டு வியப்படைந்த அலி அகா "நீங்கள் சாகாமல் தப்பினது எப்படி? எனது குறி ஒருபோதும் தப்பாது. நீங்கள் தப்பியது எப்படி? பத்திமாவைப் பற்றி இவர்கள் சொல்வது எல்லாம் என்ன? என்று கேட்டான்.

திருத்தந்தை அவனுக்கு பதில் கூறினார். ஆனால் அவர் என்ன சொன்னார் என்பது அவர்கள் இருவருக்கிடையே உள்ள இரகசியம். அலி அகாவை பத்திரிகையாளர்கள் பின்பு சந்தித்த போது, "திருத்தந்தைக்கு முழுக்கதையும் தெரியும்" என்று மட்டுமே கூறினார்.

**பத்திமாபதி முதற்காட்சி நிகழ்ந்த தினமான மே 13 அன்று தாம் சாவின் விளிம்பிலிருந்து காக்கப்பட்டதால் பத்திமா அன்னையின் மீது திருத்தந்தை கொண்டிருந்த பற்றுதலும் பத்திமாபதிக் காட்சிகள் பற்றிய ஆர்வமும் மேலும் அதிகரித்தன. கொலை முயற்சிக்குப் பின் 1987 ஜூலை 18 அன்று பத்திமா செய்தி அடங்கிய கடிதத்தை கொண்டுவரும்படி கேட்டு வாசித்த திருத்தந்தை, தேவதாய் கேட்டுக்கொண்டபடி உலகை அவளது மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்க தீர்மானித்தார். இந்த ஒப்புக் கொடுத்தல் 1984 மார்ச் 25இல் நடைபெற்றது.**



**1.2 கி.கி. நிறையுள்ள அன்னையின் முடியில் 313 முத்துக்களும், விலையேறப் பெற்ற 2676 கற்களும் பதிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு நடுவில் அத் துப்பாக்கிச் சன்னமும் பதிக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.**

இதற்கிடையில் தம்மை ஆபத்து வேளையில் பாதுகாத்த பத்திமா அன்னைக்கு நன்றி செலுத்தும் முகமாக திருத்தந்தை அத் திருத்தலத்தை 1982 மே 13ஆம் திகதி தரிசித்தார். மீண்டும் 1991இல் அதே தினத்தில் பத்திமா பதிக்கு யாத்திரையாகச் சென்று தேவதாய்க்கு தமது நன்றியைத் தெரிவித்தார்.

1982இல் பத்திமாபதிக்கு இருக்கும் வீரியா மறைமாவட்ட ஆயர் ரோமாபுரிக்கு வந்தபோது, திருத்தந்தை தமது உடலைத் துளைத்துச் சென்ற குண்டை அவரிடம் கொடுத்து அதனை பத்திமா அன்னையின் திருத்தலத்தில் வைக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆயரோ அதற்கு தேவதாயின் திருமுடியிலேயே இடமளித்தார்.

தேவதாயின் திருவுருவச் சிலை அவள் காட்சி கொடுத்த அதே இடத்தில் கட்டப்பட்ட ஆலயத்தினுள் ஒரு தூண் மீது வைக்கப்பட்டுள்ளது. (காட்சி கொடுத்த மரம் இப்போது இல்லை) விசேட திருநாட்களில் தேவதாயின் தலைமீது ஒரு பொற்கிரீடம் வைக்கப்படும். இது போர்த்துக்கல் நாட்டுப் பெண்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. **1.2 கி.கி. நிறையுள்ள இம் முடியில் 313 முத்துக்களும், விலையேறப்பெற்ற 2676 கற்களும் பதிக் கப்பட்டுள்ளன. இவற்றுக்கு நடுவில் அத் துப்பாக்கிச் சன்னமும் பதிக் கப்பட்டுள்ளது.**

மரணத்திலிருந்து தாம் பாதுகாக்கப்பட்டது மட்டுமே தேவதாயின் அருட்செயல் என்று திருத்தந்தை கருதவில்லை. தாம் பதவி வகித்த காலம் முழுவதும் தேவதாய் தமக்களித்த பாதுகாவலுக்காகவும், 1989க்குப் பின் சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பாவிலும் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக நாஸ்திக வாதம் வீழ்ச்சியுற்றதற்காகவும் தாம் நன்றி செலுத்துவதாக, அவர் இவ்வாண்டு ஜசிந்தா, பிரான்சிஸ்கோ ஆகிய இருவருக்கும் முத்திப்பேறுபெற்ற பட்டம் வழங்குவதற்காக வருகை தந்தபோது கூறியுள்ளார். அவர் தேவதாயின் மட்டில் எவ்வளவு உருக்கமான பக்தி கொண்டிருக்கிறார் என்பதற்கு ஒரு சிறு நிகழ்ச்சியே சான்றாகும்.

**முத்திப்பேறு பெற்ற திருச்சடங்கை நிறைவேற்ற அவர் பத்திமாபதிக்கு வருகை தந்திருந்த வேளையில், அன்னையின் திருச்சுருபத்தின் முன்பு அவர் நீண்ட நேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். பின்னர் அவர் கையில் அணிந்திருந்த மோதிரத்தை தேவதாய்க்கு காணிக்கையாக அளித்தார். இம் மோதிரம் அவர் பதவியேற்றபோது போலந்து நாட்டுக் கருதினால் விசென்ஸ்கி அவரை வாழ்த்தி பரிசாக அளித்ததாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அவர் இரகசியமாகக் கூறியவையெல்லாம் எனக்கும் அவருக்குமிடையில் இரகசியமாகவே இருக்கும்"

# இந்த உரையாடலில் இரகசிய வார்த்தைகள் என்ன என்பதை யாருமே இன்னும் அறிய முடியவில்லை

1983ஆம் ஆண்டு டிசம்பர் 27அன்று நத்தார் தினத்தையொட்டி சிறைப்பட்டோரைத் தரிசிக்கச் சென்ற திருத்தந்தையவர்கள் 2 1/2 ஆண்டுகளுக்கு முன் தம்மைக் கொலைசெய்ய முயன்ற அலி அகாவை அங்கு சந்தித்தார். அவரைக் கண்டு வியப்படைந்த அலி அகா, "நீங்கள் எப்படி உயிர் தப்பினீர்கள்?, எனது குறி ஒருபோதும் தவறாது. நீங்கள் தப்பியது எப்படி?" என்று கேட்டான்.

இவ்விருவரின் சந்திப்பை தொலைக்காட்சியில் உலகெங்கும் உள்ள மக்கள் கண்டனர். இதன் வீடியோ கசற் இத்தாலிய செய்திகள் தொலைக்காட்சி சேவை நிலையத்தில் உள்ளது. இவர்களது உரையாடலின் தொடக்கமும் முடிவும் தெளிவாகக் கேட்கக் கூடியதாக இருந்தது. தாழ்ந்த குரலில் பேசியதால் இடையில் உள்ளவை தெளிவாக இல்லை.

இத்தாலிய மொழியிலேயே இருவரும் உரையாடினர். திருத்தந்தை, "எப்படியிருக்கிறீர்? நல்லாக இருக்கிறீரா?" என்று வினவிய பின் இருவரும் அங்கிருந்த ஆசனங்களில் அமர்ந்து உரையாடலைத் தொடர்ந்தனர். **"எல்லாவற்றுக்கும் முதலாக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்" என அலி அகா கூறியது தெளிவாகக் கேட்டது.**

அடுத்த 10 நிமிடங்கள் திருத்தந்தை தான் அதிகமாகப் பேசினார். அலி அகா தலையாட்டுவதும், சிறு பதில்கள் சொல்வதும், புன்னகை செய்வதுமாக இருந்தான். எனினும் அவனிடம் ஒரு பதட்டம் காணப்பட்டது. பின்னர் இருவரும் குனிந்து திருத்தந்தை அகாவின் தோளுக்குக் கிட்ட தலையை வைத்து அவனது பேச்சை அவதானமாகக் கேட்டார். சந்திப்பு முடியும் நேரத்தில் அகா அமைதியாகக் காணப்பட்டதுடன், இடையிடையே திருத்தந்தையை நிமிர்ந்து பார்த்துக்கொண்டான்.



**இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் தம்மைக் கொலை செய்ய முயற்சித்த அலி அகாவை டிசம்பர் 1983இல் திருத்தந்தை சிறைச்சாலையில் சந்தித்து அன்போடு உரையாடுகிறார்.**

பின் திருத்தந்தை ஒரு வெள்ளைப் பெட்டியில் கொண்டுவந்திருந்த தனது வரவணிக்கங்களை அகாவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார் தார். இறுதியில் புதுவருட வாழ்த்துக் கூறி விடை பெற்றார்.

**இவர்களிடையே நடைபெற்ற 20 நிமிட உரையாடலில் பரிமாறப்பட்ட இரகசிய வார்த்தைகள் என்ன என்பதை யாருமே அறிய முடியவில்லை.**

பத்திரிகையாளர் அகாவைக் கேட்டபோது அவன் "திருத்தந்தைக்கு முழுக்கதையும் தெரியும்" என்று மட்டும் கூறினான்.

திருத்தந்தையோ **"என் மீது முழு நம்பிக்கையும் வைத்த என் சகோதரனுடன் பேசிவிட்டேன். அவர் இரகசியமாகக் கூறியவை எல்லாம் எனக்கும் அவருக்குமிடையில் இரகசியமாகவே இருக்கும்"** என்று பத்திரிகையாளருக்குக் கூறினார்.

தொடர்ந்தும் அவர் **"ஒவ்வொருவருக்கும் பின்னணியில் என்னென்ன இரகசியங்கள் மறைந்திருந்தாலும், எவ்வளவு ஏமாற்ற அனுபவங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருந்தாலும் ஒரு விடயத்தை நாம் மறுக்க முடியாது. அதாவது ஒவ்வொருவரையும் அறிந்து அன்பு செய்யும் ஒரு நல்ல தந்தை வானகத்தில் உள்ளார்"** என்று கூறினார்.

# யாழ். போதனா வைத்தியசாலையின் ஆன்மீக சமூக உளநல பணியகம்

# வைத்தியசாலை ஆன்மீக குருவின் பணி விரிவாக்கப்படுகிறது

## அன்புராசா அடிகளுடன் ஒரு நேர்காணல் - பேட்டி கண்டவர் T. கண்ணன் -

**நேர்காணல் : யாழ். - போதனா வைத்தியசாலையின் ஆன்மீக குருவாக பணி புரிகின்றீர்கள். இப்பணி பற்றி மக்கள் அறிந்து கொள்ளும் விதமாக உங்கள் அனுபவங்களை பாதுகாவலன் பத்திரிகையின் ஊடாக பகிர்ந்து கொள்வீர்களா?**

**பதில் :** நிச்சயமாக. எனது சிறிய இவ் அனுபவத்தை உங்கள் அனைவருடனும் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

1972ஆம் ஆண்டு இச் சிற்றாலயத்தை யாழ். அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தையாக இருந்த தேவதாசன் அடிகள் ஆயரின் உதவியுடன் உருவாக்கினார். இக்காலப்பகுதியில் வைத்தியசாலையின் சிற்றாலய ஆன்மீக குருவின் பணியினை யாழ். அடைக்கல அன்னையின் ஆலய பங்குக் குருவே கவனித்துக் கொண்டிருந்தார். எனினும், இப்பணியின் தேவை காலம் செல்ல செல்ல பரந்து விரிந்ததாகவே அமைந்தது. தேவைகளும் அதிகரித்தன.

**நேர்காணல் : இந்தப் பணி அமலமரித் தியாகிகளிடம் கைமாறப்பட்டது எப்போது என்பது பற்றி சற்றுக் கூறுவீர்களா?**

**பதில் :** அருள்திரு தேவதாசன் அடிகளைத் தொடர்ந்து 1979ஆம் ஆண்டு அமலமரித் தியாகிகளினுடைய பணி வைத்தியசாலையில் ஆரம்பமாகியது. தேவை எங்கோ அங்கே சேவை என்ற மனநிலையில் அருள்திரு டானியல் அ.ம.தி. அடிகளார் வைத்தியசாலையின் முதல் முழுநேர ஆன்மீக குருவாக பணிபுரிய முன்வந்தார். இவரின் பணி 1979ஆம் ஆண்டு ஆனி மாதம் முதல் 1987 ஆவணி வரை சுமார் 8 வருடங்கள் நீடித்தது. இவருடைய காலப்பகுதியிலும் இச்சிற்றாலயம் புனரமைக்கப்பட்டது. 1979ஆம் ஆண்டில் இப்பணியை ஏற்று, இற்றைவரை சுமார் 21 ஆண்டுகளாக தொடர்ந்து அமலமரித் தியாகிகளே வைத்தியசாலையின் ஆன்ம குருக்களாக பணிபுரிந்து வருகிறார்கள்.

**நேர்காணல் : 21 ஆண்டுகள் மிக நீண்டகாலம். அக்காலப்பகுதியில் ஆன்மீகக் குருக்களாக யார் யாரெல்லாம் பணியாற்றினார்கள் என்று கூறமுடியுமா?**

**பதில் :** நிச்சயமாக. அது என் கடமையும் கூட. அருள்தந்தையர்களான டானியல், அ.ம.தி., ஜீவேந்திராபோல் அ.ம.தி., செபஸ்ரியன் அ.ம.தி., எட்மன் றெஜினோல்ட் அ.ம.தி., ஸ்ரனிஸ்லோஸ் அ.ம.தி., யோகராஜா அ.ம.தி. ஆகியோர் இந்த 21ஆண்டுகளில் பணிபுரிந்தவர்களாவர்.

இவர்களோடு இணைந்து பல ஆண்டுகளாக உழைத்தவர்களில் திரு எட்வேட் குடும்பத்தினர் திருமதி பொன்னுக்கோன் (ஓய்வுபெற்ற தாதி), திருமதி உடையார் (தாதி), திரு ஜெயக்கப். (தாதி), திருமதி மேரி மார்கிரட் போன்றோரைக் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென எண்ணுகின்றேன்.

**நேர்காணல் : சிற்றாலய வரலாற்றினைச் சுருக்கமாகக் கூறினீர்கள் தற்போது, சிற்றாலயம் புதுப்பொலிவுடன் மட்டுமல்லாது இப்பணியினை எதிர்கால பார்வையுடன் நீங்கள் சிந்தித்து செயல்வடிவம் கொடுக்கமுனைவதாகத் தோன்றுகிறது. இது பற்றி......?**

**பதில் :** பல ஆண்டுகளாக இங்கு ஆன்ம குருக்களாக இருந்தவர்கள் கண்ட கனவே இப்போது நனவாகி இருக்கிறது. ஏனென்றால், ஆலய ஆராதனைகளோடு மட்டும் நின்றுவிட்டால், எமது வைத்தியசாலைப் பணி முழுமை பெறமுடியாது, பெறவும் கூடாது. மாறாக நோயாளர்களை, நோயாளர்களுக்குப் பணிபுரிபவர்களை பராமரிப்பவர்களை தொடுகின்ற, இவர்களின் தேவைகளை நிறைவுசெய்கின்ற பணியாக பரிணமிக்கவே ஆத்மீக சமூக உளநலப் பணியகம் ஒன்றை உருவாக்க நீண்டகாலமாக நாங்கள் சிந்தித்துக் கொண்டிருந்தோம். அதன் செயல்வடிவம் தான் சிற்றாலயத்தோடு இணைந்த இப்பணியகம் ஆகும்.

**நேர்காணல் : இப் பணியகம் என்ன பணிகளையெல்லாம் ஆற்ற திட்டமிட்டிருக்கிறது என்பதை விளக்கிச் சொல்லுவீர்களா?**

**பதில் :** * நோயளர்களையும், வைத்தியசாலையில் பலதரப்பட்ட நிலைகளில் பணிபுரிபவர்களையும் சந்தித்தல்.

* வைத்தியசாலை சந்திப்புகளை ஊக்குவிக்க, பொது நிலையினரை ஒன்று கூட்டுதல்.
* வைத்தியசாலையில் பணிபுரிபவர்களுக்கு மாதாந்த ஒன்று கூடலை ஒழுங்குசெய்தல்.
* தேவை ஏற்படுகின்ற வேளைகளில் ஆன்மகுரு தங்கி செல்லல்.
* புதுப்பித்தல் பயிற்சிநெறிகளையும், கருத்தரங்குகளையும் காலத்துக்குக் காலம் ஒழுங்குசெய்தல்.

என இன்னும் பல பணிகளை இப் பணியகம் தேவை ஏற்படும்போது தன்னோடு இணைத்துக் கொள்ளும் என்பது எனது நம்பிக்கை.

**நேர்காணல் : இன்றைய காலத்தில் அதுவும் ஒரு போர்ச்சூழலில் துணிந்து கட்டடப் பணிகளில் இறங்கியுள்ளீர்கள் இப்பணிக்கான பண மற்றும் உதவிகளையும் எப்படிப் பெற்றுக்கொண்டீர்கள்?**

**பதில் :** நல்ல கேள்வி. பல நல் உள்ளங்களின் முயற்சியும், பிரயாசையும், தியாகமும்தான் இங்கு வழிவகுத்தது. குறிப்பாக இம் முயற்சிக்கு உதவி மட்டுமல்லாது ஊக்கமும் உற்சாகமும் தருகின்ற அமலமரித் தியாகிகள் குடும்பத்திற்கும், யாழ். மாகாண அ.ம.தி. முதல்வர் அருள்திரு ஜீவேந்திராபோல் அ.ம.தி. அவர்களுக்கும் நன்றி கூறவேண்டும். எமது தேவை உணர்ந்து உதவி புரிகின்ற முன்னாள் வைத்தியசாலை ஆன்மீக குருவும், பிரான்சு - இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியக ஆன்மீக குருவுமான அருள்திரு செபஸ்ரியன் அ.ம.தி. அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இலைமறைகாய்களாக என்னுடன் தோளோடு தோள்நின்று பல வழிகளில் உழைக்கின்றவர்களையும் பாராட்டுகின்றேன்.

**நேர்காணல் : வைத்தியசாலை சிற்றாலய ஆன்மீக குரு என்ற வகையில் உங்கள் பணி யார் யாரைச் சென்றடைகிறது? எப்படியான மக்களை சந்திக்கிறீர்கள்?**

**பதில் :** ஓர் இறையியல் அறிஞர் கூறுவதுபோல இரண்டு வகையான கிறீஸ்தவர்கள் இருக்கின்றார்கள். ஒன்று ஞானஸ்நானம் பெற்று, கிறீஸ்தவர்கள் என்ற பெயரைக் கொண்டு கிறீஸ்தவ வாழ்க்கை வாழ்பவர்கள். இரண்டாவது வகையினர், கிறீஸ்தவர்கள் என்று பெயரிடப்படாமல், கிறீஸ்தவ வாழ்க்கை வாழ்பவர்கள். கத்தோலிக்க இறைமக்களுக்காக ஆன்மகுருவாக பணிபுரிய அனுப்பப்பட்டாலும், இப்பணியினுடைய பண்பும் தன்மையும் அதிலும் சிறப்பாக இப் போர்க்கால சூழலில் உடல் உளரீதியில் பாதிக்கப்பட்டு சோர்ந்துபோன, நொந்துபோன, காயப்பட்ட, வேதனைப்படுகின்ற பலரை இப்பணியினூடாக தொடக்கூடியதாக இருக்கின்றது. காரணம், மனிதனை மனிதத்துவத்தை யும் வாழவைக்கவே இறைமகன் இயேசு பணிபுரிந்தார்.

**நேர்காணல் : ஒட்டுமொத்தமாக உங்கள் பணி பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

**பதில் :** உடைந்துபோன உள்ளத்துக்கு உற்சாகத்தையும், வேதனைப்படுகின்ற இதயங்களுக்கு தேற்றரவையும், அழுகிறவர்களுக்கு ஆறுதலையும், கஷ்டப்படுகின்றவர்களுக்கு ஆதரவையும், விரக்தியுற்ற மனங்களுக்கு வாழ்வில் நம்பிக்கையையும் கொடுக்கின்ற பணியாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org